Registered as a News Paper　　பக்கங்கள் 06　　விலை ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 03　　திருவள்ளுவர் ஆண்டு 2023　　புரட்டாதி 30　　(16-10-1992)　　வெள்ளிக்கிழமை　　ஓசை 241

## வைப்புக்களை ஏற்க மறுப்பின் வங்கியின் முன் மறியல்

(நமது நிருபர்)

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் வைப்புக்களை ஏற்க மக்கள் வங்கி மறுத்துவருவதைக் கண்டித்து மாபெரும் மறியல் போராட்டத்தை நடாத்த யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை தீர்மானித்துள்ளது. இது தொடர்பாக மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளருக்கு மேற்படி சபை அனுப்பிவைத்துள்ள கடிதத்தின் விபரம் வருமாறு: யாழ். மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் தமது நடவடிக்கைகளை மக்கள் வங்கிக் கிளையிலேயே வைத்து நடைமுறைப்படுத்தி வருகின்றன. தங்களுக்குத் [5 ஆம் பக்கம் பார்க்க]

# 142 முஸ்லிம் சிங்களவர் சாவு

# 19 ஆயுதப்படையினரும் பலி

## பொலநறுவவில் சம்பவம்

(கொழும்பு)

பொலநறுவ மாவட்டத்தில் நான்கு கிராமங்களைச் சேர்ந்த 142 பேரும், சிறிலங்கா ஆயுதப்படையைச் சேர்ந்த 19 பேரும் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. கொல்லப்பட்ட கிராமவாசிகளில் பெரும்பான்மையானோர் முஸ்லிம்கள் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. இச் சம்பவத்தில் 80க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் தெரியவருகின்றது:

பொலநறுவை மாவட்டத்தின் வடக்கு எல்லையோரக் கிராமங்களில் இச்சம்பவம் இடம்பெற்றது. பாலியகொடல்ல, அகமத்புர, அம்பேத்புர, றப்போவில ஆகிய கிராமங்களிலேயே இக்கொலைகள் இடம்பெற்றன. நேற்று அதிகாலை இடம்பெற்ற இச் சம்பவத்தின்போது பல வீடுகளும் தீக்கிரையானதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இச்சம்பவம் இடம்பெற்ற கிராமங்களுக்கு இராணுவத்தினர் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### மாவட்ட அமைச்சர் பொலநறுவ சென்றார்

(பொலநறுவ)


பொலநறுவ மாவட்ட அமைச்சர் எச்.ஜி.பி. நெல்சன் நேற்று சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு சென்றதாக தெரிவிக்கப்படுகிறது. இவரும் இவரது குழுவினரும் இறந்தவர்களுடைய மரணச் சடங்கிற்கு பண உதவி வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நட்டஈட்டு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வது நிறுத்தம்

(நல்லூர்)

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 49/89 ன்படி கல்வித் திணைக்களங்களிலும் பாடசாலைகளிலும் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டுவந்த சொத்து இழப்புக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு விண்ணப்பங்களை இனிமேல் தமக்கு மறு அறிவித்தல் கிடைக்கும் வரை அனுப்பிவைக்க வேண்டாம் என்று வட கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் நிர்வாக உத்தியோகத்தர் திரு ஏ. கே. சண்முகநாதன் சகல கல்விப்பணிப்பாளர்களுக்கும் கடிதம் மூலம் பணித்துள்ளார்:

இவ் விண்ணப்பப் படிவங்களை றேப்பியாவுக்கு திருப்பி அனுப்புவதற்காக தமக்கு அனுப்ப வேண்டாம் என்று பிரதம செயலாளர் தமக்கு பணித்துள்ளார் எனவும் இவர் மேலும் இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.



பளைப்பிரதேச காவல் பணிமனையை நேற்று முன்தினம் நாடாவை வெட்டி விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தி திறந்து வைப்பதையும், அருகில் தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. நடேசனும், நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா நிற்பதையும் படத்தில் காணலாம்.

## கூட்டுப்படைத் தளபதி வெள்ளரசைத் தரிசித்தார்

கூட்டுப்படைத் தலைமைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வணசிங்க கடந்த 13ஆம் திகதியன்று அநுராதபுரம் வெள்ளரசு மரத்தையும், பௌத்த குருமாரையும் வணங்கி ஆசி பெற்றுக் கொண்டார் எனத் தெரிய வருகிறது.

வட-கிழக்கில் நடத்தப்படவுள்ள இராணுவ நடவடிக்கைகளில் வெற்றி பெறும் நோக்குடனேயே அவர் அநுராதபுரம் சென்று ஆசி பெற்றார் என அறிய வருகிறது.

அநுராதபுரத்தில் உள்ள இரண்டாவது படைத் தலைமையகத்தில் அவர் வடபகுதி தளபதி மேஜர் ஜெனரல் ஜெரி. டி. சில்வாவை சந்தித்து உரையாடினார். அத்துடன் எதிர்கால இராணுவத் திட்டங்களையிட்டு இருவரும் கலந்துரையாடினர். மேலும் வட-கிழக்கில் சிங்களவருக்குக் கூடுதல் பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் அவர் உறுதியளித்ததாகத் தெரிய வருகிறது.

## வீரச்சாவு



2-ம் லெப். மறைச்செல்வன்

01-10-92 அன்று கட்டைக்காட்டில் சிறிலங்கா இராணுவ

## நிவாரண விநியோகத்தில்

### கடலில் குதித்து உயிர் தப்பினர்

## கற்பிட்டியில் மூழ்கிய



பளைப்பிரதேச காவல் பணிமனையை நேற்று முன்தினம் நாடாவை வெட்டி விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தி திறந்து வைப்பதையும், அருகில் தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. நடேசனும், நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா நிற்பதையும் படத்தில் காணலாம்.

பொலநறுவை மாவட்டத்தின் வடக்கு எல்லையோரக் கிராமங்களில் இச்சம்பவம் இடம்பெற்றது. பாலிய கொடல்ல, அகமத்புர, அம்பேத்புர, றப்போவில ஆகிய கிராமங்களிலேயே இக்கொலைகள் இடம்பெற்றன. நேற்று அதிகாலை இடம்பெற்ற இச் சம்பவத்தின்போது பல வீடுகளும் தீக்கிரையானதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இச்சம்பவம் இடம்பெற்ற கிராமங்களுக்கு இராணுவத்தினர் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## வீரச்சாவு



2-ம் லெப்.

மறைச்செல்வன்

01-10-92 அன்று கட்டைக் காட்டில் சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பின் போது 2-ம் லெப்டினன்ட் மறைச்செல்வன் (வின்சன் - சண்முகம் திருச்செல்வம் சிறுப்பிட்டி மத்தி நீர்வேலி) வீரச்சாவு அடைந்தார். கட்டைக்காட்டு முகாம் தகர்ப்பின்போது இரண்டு இராணுவ வாகனங்களும்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## கூட்டுப்படைத் தளபதி வெள்ளரசைத் தரிசித்தார்

கூட்டுப்படைத் தலைமைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வணசிங்க கடந்த 13ஆம் திகதியன்று அநுராதபுரம் வெள்ளரசு மரத்தையும், பௌத்த குருமாரையும் வணங்கி ஆசி பெற்றுக் கொண்டார் எனத் தெரிய வருகிறது.

வட-கிழக்கில் நடத்தப்படவுள்ள இராணுவ நடவடிக்கைகளில் வெற்றி பெறும் நோக்குடனேயே அவர் அனுராதபுரம் சென்று ஆசி பெற்றார் என அறிய வருகிறது.

அநுராதபுரத்தில் உள்ள இரண்டாவது படைத் தலைமையகத்தில் அவர் வடபகுதி தளபதி மேஜர் ஜெனரல் ஜெரி. டி. சில்வாவை சந்தித்து உரையாடினார். அத்துடன் எதிர்கால இராணுவத் திட்டங்களையிட்டு இருவரும் கலந்துரையாடினர். மேலும் வட-கிழக்கில் சிங்களவருக்குக் கூடுதல் பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் அவர் உறுதியளித்ததாகத் தெரிய வருகிறது.

## நிவாரண விநியோகத்தில் பழுதடைந்த பொருள்கள்

இடம் பெயர்ந்தோருக்கான உலர் உணவு விநியோகத்தின் ஐப்பசி மாத இரண்டு கட்டங்களுக்கான பொருள்களில் வெள்ளைகௌபி, பட்டாணிப் பருப்பு என்பனவும் அடங்குகின்றன. இவ்விரு பொருள்களும் மிகவும் பழுதடைந்து பாவனைக்குதவாத நிலையில் காணப்படுவதாக பல நோக்கு கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் கூறுகின்றன. எனவே இப் பொருள்களை எவ்வாறு பாவனையாளர்களுக்கு விநியோகிப்பது என்பதில் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்குகின்றன. (22)

## கடலில் குதித்து உயிர்தப்பினர்

(வடமராச்சி)

பருத்தித்துறை கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தவர்கள் சிறிலங்கா கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டிலிருந்து மயிரிழையில் உயிர்தப்பினர்.

நேற்று காலை 6.30 மணியளவில் இப்பகுதிக்கு விரைந்து வந்த சிறிலங்கா கடற்படையினர் எதிர்ப்பட்ட மீன்பிடிப் படகுமீது சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இவ்வேளை அப்படகிலிருந்த இரு மீனவர்களும் கடலில் குதித்து உயிர் தப்பினர்.

மீனவர் படகை நெருங்கிப் பார்த்த கடற்படையினர்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## மீட்புநிதி சேகரிப்பு

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான மீட்பு நிதி சேகரிப்பு நாளை முற்பகல் 9-00 மணி தொடக்கம் 12-00 மணி வரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான மீட்புநிதி சேகரிப்பு பிற்பகல் 2-00 மணி தொடக்கம் 5-00 மணி வரை மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும் இடம்பெறும் என தமிழீழ விடுதலைப்புலிகள் நிதிப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

## கற்பிட்டியில் மூழ்கிய கப்பலின் பெறுமதி 5 கோடி

கற்பிட்டிக் கடலில் மூழ்கிய சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான 'கந்துல' என்ற கப்பலின் பெறுமதி ஐந்து கோடி ரூபா என்று தெரிவிக்கப்படுகிறது.

சீரற்ற காலநிலை காரணமாகக் கடந்த வெள்ளியன்று இரவு இந்தக் கப்பல் மூழ்கியதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள நியமிக்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## எய்ட்ஸ் நோயாளி கொழும்பில் பலி

எய்ட்ஸ் நோயாளி எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் கொழும்பு ஆஸ்பத்திரியில் கடந்த திங்கட்கிழமை இரவு உயிரிழந்துள்ளார்.

'எய்ட்ஸ்' நோய் உள்ளவர் என உறுதிப்படுத்தப்பட்ட

[5 ஆம் பக்கம் பார்க்க]

## பற்றறிகள் ராணுவம் பறிப்பு; லொறிச் சேவை முடக்கம்

(வவுனியா)

வடபகுதிக்குச் செல்லும் லொறிகளின் பற்றறிகளை வவுனியாவில் வைத்து அகற்றிவிடும் சிறிலங்கா இராணுவத்தினரின் நடவடிக்கையினால் முந்நூறுக்கும் அதிகமான லொறிகள் உணவுப் பொருள் எடுத்துச் செல்லும் சேவையில் ஈடுபடாமல் இருக்கின்றன என்றுவவுனியாவிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

லொறிகளை தள்ளியே 'ஸ்டார்ட் செய்ய' வேண்டும் என்றும் என்ஜின் இயங்காத நேரத்தில் விளக்குகளை எரிய வைக்கமுடியாது மழை காலத்தில் இந்த வசதிகள் இல்லாமல் காட்டுப்பாதைகளில் லொறிப்பயணம் செய்வது மிகக் கஷ்டமானது என்றும் லொறி உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதே நேரம் ஏற்கனவே 150 க்கும் அதிகமான லொறிகள் வவுனியாவில் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப் பட்டுள்ளதாகவும், இதனால் 500 லொறிகள் தற்போது வடக்கிற்கும் - கொழும்புக்குமிடையே பொருள்களைஎடுத்

(5 ஆம் பக்கம் பார்க்க)

# அடம்பனில் புலிகள் அதிரடி; 4 படையினர் பலி; பலர் காயம்

(மன்னார்)

மன்னார் மாவட்டம்இத்திக்கண்டல் என்னுமிடத்திற்கு தடைகளை அகற்றவந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது நேற்று விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இத்தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் பலியாகியுள்ளதுடன் அவர்களிடமிருந்த ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப் பற்றப்பட்டன.

அடம்பன் பாலைக்கொடிப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தொடர் காவலரண்களிலிருந்து 10 இற்கு மேற்பட்ட இராணுவத்தினர் வெளியேறி வந்துகொண்டிருந்தனர். இவர்கள் மீது காலை 11.40 மணியளவில் இந்த அதிரடித் தாக்குதல் நடத்தப் பட்டது. ஐந்து நிமிடநேரம் இடம்பெற்ற இத்தாக்குதலின் போது 04 இராணுவத்தினர் பலியாகினர். ஏனையோர் காயங்களுடன் காவலரண்களை நோக்கி தப்பி ஓடிவிட்டனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(மன்னார்)

மன்னார் மாவட்டம் இத்திக்கண்டலில்நேற்று விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| ★ | ரி - 56 - 2 ரக துப்பாக்கி | — 04 |
| ★ | நடுத்தர ரவைகள் | — 676 |
| ★ | ரி 56 மகசின் | — 16 |
| ★ | ஏ. கே. கோல்சர் | — 04 |
| ★ | ஜே. ஆர். கைக்குண்டு | — 02 |
| ★ | புகைக்குண்டு | — 01 |
| ★ | தலைக்கவசம் | — 03 |
| ★ | தொப்பி | — 02 |

இராணுவ நடவடிக்கையால்

## 1800 ஏக்கர் நெற்செய்கை மன்னாரில் கைவிடப்பட்டது

மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினரால் சமீபத்தில் மேற் கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையை தொடர்ந்து சுமார் 1800 ஏக்கர் சிறுபோக நெற் செய்கையை கைவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ நடவடிக்கையினால் உயிலங்குளம், அடம்பன், ஆண்டான் குளம் பகுதி மக்கள் மடுஅகதிமுகாமிற்கும் வேறு இடங்களுக்கும் சென்றுள்ளனர். இதனால் அங்குள்ள விவசாயிகள் தமது நெல் வயல்களை சென்று பார்க்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அறுவடை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் வேளாண்மையை

[5 ஆம் பக்கம் பார்க்க]

## பிக்குமார் சங்க நிர்வாகம்; சரியானமுறையில் தெரிவாம்

பிக்குகள் சங்கத்தின் தெரிவு செல்லுபடியற்றதென சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்ததற்கு பிக்குமார் கண்டனம் தெரிவித்துள்ளனர்

தங்களுடைய சங்கத்தின் நிர்வாகிகள் தெரிவு சிறிலங்கா சுதந்திரக்கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி பிக்குகள் சங்கம் ஆகியவற்றின் சட்ட திட்டங்களுக்கு அமையவே நடைபெற்றது என புதிதாகத் தாபிக்கப்பட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பிக்குமார்கள் சங்கத்தின் தலைவர் வணக்கத்திற்குரிய வணவிட்ட சந்தானந்த நாயக்க தேரோவும் அதன் பொதுச் செயலாளர் வண. வஜிரவீர தேரரும் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர்.

## தொலைக்காட்சி நாடகமாக பிரேமதாசாவின் நாவல்

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் நாவலொன்று தொலைக்காட்சி நாடகமாக தயாரிக்கப்படவுள்ளது. அவர் எழுதிய ''திசமத்திய'' என்ற நாவலை தொலைக்காட்சி நாடகமாக்கும் உரிமையினை தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

இந்த நாவல் கிராமத்துப் பெண்ணொருத்தியின் அன்றாட வாழ்க்கையைச் சித்திரித்துக்காட்டுகிறது இத் தொலைக்காட்சி நாடகம் தயாரிக்கப்பட்டு ரூபவாகினியில் ஒளிபரப்பப்படும் எனத் தெரியவருகிறது

காட்டினில் மரங்களை உயர்த்துவோம்
நாட்டினில் மழையினை வீழ்த்துவோம்

## வரி விளம்பரம்

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. சகல கடிகாரங்கள், றேடியோக்கள் வாங்கப்படும், விற்கப்படும். டில்கா வாச் வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5152)

### தரன் ஸ்ரூடியோ

குறைந்த சலாரி குறித்த நேரம் தீபாவளித் தினத்தை முன்னிட்டு 9-10-92, 27-10-92 வரை சகலவித போட்டோ மற்றும் வேலைகட்கு 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (3334)

### ஆண்டு 5 புலமைப்பரிசில்

அடுத்த புலமைப்பரிசில் பரீட்சைக்காக இப்பொழுது இருந்தே பயிற்சி அளிக்கும் ஆர்வமுள்ள பெற்றோர்களுக்காக மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். வீட்டில் வைத்து விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institute, 582, Stanley Road Jaffna. (சி-5169)

### இரசாயன நூல்

ஆசிரியர் சத்தீசின் அசேதன இரசாயனம் பண்பறி பகுப்பு நூல் வெளிவந்து விட்டது. புத்தகசாலைகளில் பெறலாம். (3472)

### யாழ். பழைய புத்தகக்கடை

அரும், பெரும் பழைய புத்தகங்கள், வாங்கவும், விற்கவும் சிறந்த இடம். யாழ். பழைய புத்தகக் கடை, அர்ச்சுனா வீதி, (ஸ்ரான்லி) யாழ்ப்பாணம். (3210)

ooooooooooooooooooooooo

### நீமியா உரம்

அடிக்கட்டுஉரம்கரைந்தோ, நீராவியாகவோ விரயமாகாது பாதுகாக்கிறது. நீமியா உரம் பயிர் வளர்ச்சி, விளைச்சல் பெருக்கம், பூச்சிகளிலிருந்து பாதுகாப்பு இதன் தனி சிறந்த அம்சங்கள். அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கிறது.

## ஏகதின லக்ஷார்ச்சனை

கிளிநொச்சி

இரணைமடு ஸ்ரீ கனகாம்பிகை அம்மன்கோயிலில் வருடம் தோறும் நடைபெறும். லக்ஷார்ச்சனை இவ்வருடம் ஐப்பசி மாதம் தமிழ் - 5ஆந் திகதி புதன் கிழமை (21-10-1992) காலை முதல் மாலை வரை நடைபெறும்- மேற்படி ஆலயத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் கேதார கௌரி விரதமும் 25-10-1992 ஞாயிற்றுக்கிழமையோடு நிறைவுறும்- அனைவரும் வந்து அம்பிகை அருளைப் பெறுமாறு ஆலய பரிபாலன சபையார் வேண்டுகின்றனர்-

லக்ஷார்ச்சனை பிரதமகுரு
சிவஸ்ரீ ராம் கெங்காதரக் குருக்கள்
சாரதாபீடம், அல்லையம்பதி,
கிளிநொச்சி மாவட்ட குருமார்பலரும்
வந்து சிறப்பிப்பார்கள்-

(3458) சுபம்

## ஆசார்யாபிஷேக அழைப்பிதழ்

நிகழும் ஆங்கீர வருடம் ஐப்பசி மாதம் தமிழ் 7-ம் திகதி வெள்ளிக்கிழமை (23-10-1992) காலை 6 02 முதல்- 7.34 வரையுள்ள துலாலக்கின சுப முகூர்த்த வேளையில் எமது ஆலய குரு,
பிரம்மஸ்ரீ நா சிதம்பரேஸ்வரசர்மா அவர்களுக்கு,
மேற்படி இரணைமடு கனகாம்பிகை அம்பாள் ஆலய மண்டபத்தில் நடைபெற இருப்பதால் இந்த அழைப்பை எல்லோரும் ஏற்றுக் கொண்டு குருக்களின் ஆசி பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தீக்ஷா நாமகுரு**
**சிவஸ்ரீ நாகேந்திரக்குருக்கள் அவர்கள்**

சுபம் இங்ஙனம்,
(3459) ஆலயபரிபாலனசபை

## கிறந்த பல்கலைக் கழகம்
## பட்டமேற்கல்வி டிப்புளோமா
### பகுதி II

மேற்படி கற்கை நெறியின் மீட்டல் வகுப்புகள் ஒக்டோபர் 18, 19-ம் திகதிகளில் (ஞாயிறும், திங்களும்) 9 மணி தொடக்கம் 4 மணிவரை நடைபெறும். தவறாது சமுகமளிக்கவும்.

தேர்வுகள் ஒக்டோபர் 24-ம் திகதி தொடக்கம் நடைபெறவிருப்பதால் அனுமதி அட்டைகளை யாழ். அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

கொக்குவில் உதவிப்பணிப்பாளர்
15-10-92 (சி 5225)

## தேவை

★ மெசின் மைண்டர்
★ கொம்போசிஸ்டர்

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



| வீரஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 05 | 16 |
| — | — |
| 02 | 10 |
| — | — |
| 1962 | 1987 |

### வீரவேங்கை கணேஷ்
[கைலாயநாதன் கணேசவேல்]

கண்ணிமைக்கும் முன்னே காட்சி நடந்ததடா
கல்லுண்டாய் போரினிலே உன்வாழ்வு முடிந்ததடா
கணேஷா நீ மறைந்து ஐந்து ஆண்டு கடந்தாலும்
கன்னித்தமிழ உன்னை ஒரு நாளும் மறவாது.

நவாலி வீதி, - குடும்பத்தினரும்
ஆனைக்கோட்டை, நண்பர்களும்
(3346)

## நன்றி நவிலலும் 45-ம் நாள் நினைவஞ்சலியும்



### 2-வது லெப். விழி
[சங்கரப்பிள்ளை – நிமலேஸ்வரி]

ஏழாலை மேற்கு, ஏழாலை

தோற்றம் மறைவு
1965.9.20 1992.9.03

நவபுரம் கைகுடியில் விபத்தில் மரணமடைந்த (சங்கரப்பிள்ளை - நிமலேஸ்வரி) விழி இன் இறுதி அஞ்சலியில் கலந்து கண்ணீர் அஞ்சலிப்பிரசுரம் வெளியிட்ட ஏழாலை வாழ் அன்பர்கள் நவபுரம் வாழ் மக்கள் நவ

## தவறி விட்டது

காரைநகர் பாலா ஓடையைச் சேர்ந்த பொன்னம்பலம் சிவசுப்பிரமணியம்என்பவருடைய அடையாள அட்டையும், மணிப்பேர்சும் அத்தியடிக்கும், ஆஸ்பத்திரி வீதிக்கும்இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 1026 கே. கே. எஸ் றோட், நாச்சிமார் கோயிலடி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். (சி/5226)

## நினைவு கூருகின்றோம்...

### 1992-10-16

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு தன்னாமுனைப் பகுதியில் இந்தியப் படையினர் மீது மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-
லெப். விஜய் (ஆறுமுகம் சிவம் - ஆறுமுகத்தான் குடியிருப்பு - மட்டக்களப்பு)

யாழ். கொக்குவில் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-
மேஜர் அசோக் (சோதிலிங்கம் விஜயகுமார்- நெடியகாடு, வல்வெட்டித்துறை, யாழ்.)

யாழ் கல்லுண்டாய் வெளியில், இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-
கணேசவேல் (கைலாசநாதன் கணேசவேல்-ஆனைக்கோட்டை - யாழ்)
லெப். முத்து (அருச்சுனன் ஜெயக்குமார் - கனகசபைவீதி, மானிப்பாய் - யாழ்)

மட்டக்களப்பில் இந்தியப்படையினரால் அடித்துக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன், மற்றும் உயிருடன் தீ மூட்டிக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

யாழ் கோண்டாவில் வடக்கு [illegible] வொணி வீதி, இ. போ. ச. சாலை பணிமனைப் பகுதிகளில் இந்தியப் படையினர் மேற் கொண்ட அட்டூளியங்களின் போது கொல்லப்பட்ட தம்பதிகளான இளைப்பாறிய நீர்ப்பாசன அதிகாரி, இளைப்பாறிய ஆசிரியை, இவர்களின் மகனான யாழ். பல்கலைக் கழக வைத்திய பீட மாணவன். மற்றும், இரு மாணவிகள் உட்பட 52 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு அம்பாறை, கல்முனை, நற்பிட்டி முனைப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-
கிருபை (கணபதிப்பிள்ளை இருபைராசா - கரடியனாறு - மட்டு)

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில், இந்தியப்படை, மற்றும், தேசவிரோதிகளின் சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-
கடாபி (இராமலிங்கம் ரவீந்திரன் - இல 254, 5ஆம் படிவம், தர்மபுரம் - கிளிநொச்சி)

மட்டக்களப்பு பெரியகல்லாறுப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

1989 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1990ஆம் ஆண்டு வவுனியா - பூந்தோட்டம் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

வவுனியா - மாமடுப் பகுதியில் ஊர்காவற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இளமருதங்குளத்தைச் சேர்ந்த தமிழப் பொதுமகன்.

சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு, வவுனியா முகாமில் வைத்து அடித்துக் கொல்லப்பட்ட மாறம்பைக் குளத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1991ஆம் ஆண்டு ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான சமரில் விழுப்புண் அடைந்து யாழ். மருத்துவ மனையில் சிகிச்சையின் போது வீரச்சாவெய்திய-

இரசாயனம் பண்பறி பகுப்பு நூல் வெளிவந்து வி்டது. புத்தகசாலைகளில் பெறலாம்.

(3472)

### யாழ். பழைய புத்தகக்கடை

அரும், பெரும் பழைய புத்தகங்கள், வாங்கவும், விற்கவும் சிறந்த இடம். யாழ். பழைய புத்தகக் கடை, அர்ச்சுனா வீதி, (ஸ்ரான்லி) யாழ்ப்பாணம்.

(3210)

### நீமியா உரம்

அடிக்கட்டுஉரம்கரைந்தோ, நீராவியாகவோ விரயமாகாது பாதுகாக்கிறது. நீமியா உரம் பயிர் வளர்ச்சி, விளைச்சல் பெருக்கம், பூச்சிகளிலிருந்து பாதுகாப்பு இதன் தனி சிறந்த அம்சங்கள். அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கிறது.

–மில்க்வைற்

(சி. 5227)

### திரிவேணிசங்கமம் கலைவிழா

(யாழ்ப்பாணம்)

'திரிவேணி சங்கமம்' கலைவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 00 மணிக்கு யாழ். கனகரத்தினம் ம. ம. வித்தியாலயத்தில் கல்லூரி அதிபர் திரு மு. இராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

---

பகுதி II

மேற்படி கற்கை நெறியின் மீட்டல் வகுப்புகள் ஒக்டோபர் 18, 19-ம் திகதிகளில் (ஞாயிறும், திங்களும்) 9 மணி தொடக்கம் 4 மணிவரை நடைபெறும். தவறாது சமுகமளிக்கவும்.

தேர்வுகள் ஒக்டோபர் 24-ம் திகதி தொடக்கம் நடைபெறவிருப்பதால் அனுமதி அட்டைகளை யாழ். அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

கொக்குவில்
15-10-92

உதவிப்பணிப்பாளர்

(சி 5225)

---

## தேவை

★ மெசின் மைண்டர்

★ கொம்போசிஸ்டர்

★ புத்தகம் கட்டுபவர் [புக் பைன்டர்]

மேற்படி பதவிகளுக்கு முன் அனுபவம் உள்ளதிறமைசாலிகள் விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 21-10-1992**

விளம்பர இலக்கம் - 173
மே-பா ஈழநாதம்
யாழ்ப்பாணம்.

(3471)

---



## 2-வது லெப். விழி

[சங்கரப்பிள்ளை – நிமலேஸ்வரி]

ஏழாலை மேற்கு, ஏழாலை

தோற்றம் 1965.9.20 | மறைவு 1992.9.03

நவபுரம் கைதடியில் விபத்தில் மரணமடைந்த (சங்கரப்பிள்ளை - நிமலேஸ்வரி) விழி இன் இறுதி அஞ்சலியில் கலந்து கண்ணீர் அஞ்சலிப்பிரசுரம் வெளியிட்ட ஏழாலை வாழ் அன்பர்கள் நவபுரம் வாழ் மக்கள் நவபுரம் சனசமூக நிலையத்தினருக்கும் உற்றார் உறவினர் நண்பர்களுக்கும் அன்னாரின் இறுதிப்பயணம் சிறப்பாக நடைபெற உதவிய தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது இல்லத்தில் 17-10-92 சனிக்கிழமை நடைபெற இருக்கும் வீட்டுக்கிருத்திய வைபவத்திலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

அன்னாரது பிரிவால் துயருறும்
அம்மா, சகோதரர்கள், சகோதரிகள்
மைத்துனர்கள் மைத்துனிகள், பெறாமக்கள்
மருமக்கள்.

(3460)

---


தீபாவளிப்பண்டிகையை முன்னிட்டு சகாய விலை......

நவநாகரீக டிசைன்களில்....

நாகரீகஉலகின் நங்கையர் ஆடவர் சிறுவர்கள் மழலைகள்

அனைவருக்கும்....

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட..

★ ஒயில் ஸ்கேட் & பிளவ்ஸ் ★ சாறிவகைகள் ★ துணிவகைகள்

★ றெடிமேட் ஜீன்ஸ் ★ சூட்டிங்ஸ் ★ சேட்டிங்

★ பேபி சூட் ★ சிறுவர் சிறுமியர்ஆடைகள்

அத்தனையும் ஒரே இடத்தில் ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

உங்கள் நல்வரவை நாடும்

லலிதா புடைவை மாளிகை

இல. 5, 6, நவீனசந்தை - யாழ்ப்பாணம்

சி-5216


---

இருபை (கணபதிப்பிள்ளை இருபைராசா - கரடியனாறு - மட்டு)

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில், இந்தியப்படை, மற்றும், தேசவிரோதிகளின் சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

கடாபி (இராமலிங்கம் ரவீந்திரன் - இல. 254, 5ஆம் படிவம், தர்மபுரம் - கிளிநொச்சி)

மட்டக்களப்பு பெரியகல்லாறுப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

1989 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1990ஆம் ஆண்டு வவுனியா - பூந்தோட்டம் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

வவுனியா - மாமடுப் பகுதியில் ஊர்காவற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இளமருதங்குளத்தைச் சேர்ந்த தமிழப் பொதுமகன்.

சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு, வவுனியா முகாமில் வைத்து அடித்துக் கொல்லப்பட்ட மாறம்பைக் குளத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1991ஆம் ஆண்டு ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான சமரில் விழுப்புண் அடைந்து யாழ். மருத்துவ மனையில் சிகிச்சையின் போது வீரச்சாவெய்திய-

லெப். யோகா (யசோதாதேவி கறுப்பையா, கட்டைபறிச்சான், மூதூர் - திருக்கோணமலை)

ஆனையிறவில் சிறிலங்காப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

சாள்ஸ் (செல்வேந்திரன் - மட்டுவில், சாவகச்சேரி யாழ்)

மணலாறு கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

மேஜர் டிசான் (கந்தப்போடி இலங்கநாதன் - ஏறாவூர் - மட்டக்களப்பு)

2-ம் லெப். கோபி (கனகரெட்ணம் சிவகுமார்-கட்டுடை மானிப்பாய் மேற்கு - யாழ்.)

மதி (மோகனாம்பிகை அருளம்பலம்-பத்தானைக்கேணியடி, மூளாய் - யாழ். )

லெப். காந்தி (செல்லத்தம்பி ராஜன் - வாழைச்சேனை - மட்டக்களப்பு)

லெப். கோவலன் கோவன் (சின்னத்தம்பிமனோகரன் - மன்னம்பிட்டி - மட்டக்களப்பு)

கிறிஸ்ரி (சின்னவேல் சிவகுமார்-புல்லுமலை - மட்டக்களப்பு]

சந்துரு (கணபதிப்பிள்ளை குலேந்திரன் - தம்பிலுவில் அப்பாறை)

லெப். வசந்தன் (நடராசா ரவீந்திரன் - மன்னார் வீதி - வவுனியா )

2-ம் லெப். நிசாந்தன் (நாகநாதன் புலேந்திரன்-பாண்டியன்குளம், வவுனிக்குளம், மாங்குளம் - முல்லைத்தீவு]

2ஆம் லெப். சாஸ்திரி (அந்தோனி சந்திரதாஸ் - பெரிய உப்போடை - மட்டக்களப்பு)

லெப். மைலி (கிருஷ்ணகுமாரி - கருநாட்டுக்கேணி கொக்கிளாய் - மணலாறு)

லெப். நீலன் (மயில்வாகனம் சேதுலிங்கம் - புதுவளவு, வல்வெட்டித்துறை - யாழ்)

காசிம் (அப்புத்துரை பத்மநாதன் - பண்டத்தரிப்பு யாழ்]

மதன் [தியாகராசா தங்கராசா- களுதாவளை - களுவாஞ்சிக்குடி-மட்டக்களப்பு]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-5224)



# வேவுப் புலி மேஜர் கார்வண்ணன்

யாழ். குடாநாட்டின் செம்மண் தோட்டவெளிகளையும் மணற்பரப்புக்களையும் ஆக்கிரமித்து அழிக்க காத்திருந்த யுத்தடாங்கிகளின் இரும்புச்சங்கிலிகளிடையே 1992ஆம் ஆண்டுபிரசவித்தது ஈழமண்ணின்வானப்பரப்பெங்கும் போர்மேகங்கள் கருத்தரித்திருந்தன. எந்நேரமும் பெரும் அனர்த்தங்களுடன் கூடிய போர் வெடிக்கும் சூழ்நிலை உருவாகியிருந்தது. யாழ். குடாநாட்டினை ஆக்கிரமித்து அழிவுகளை செய்வதற்காய் சிங்களவெறியர்கள் அணிவகுத்து போர் வெறிமுற்றிய தளபதிகளின் பின்னால் தயாராய் நின்றனர். குடாநாட்டின் தரைவழித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு நாலாபுறமும் அன்னியரால் முற்றுகையிடப்பட்டது பலாலிப் பெருந்தளமும், ஆனையிறவு வெற்றிலைக்கேணி இராணுவ வேலியும், சகல தீவக பிரதேசத்து இராணுவ குடியிருப்புக்களும், குடா நாட்டின் மையத்தை குறிப்பார்க்க ஆரம்பித்தன. புனிதமான இத்தாயக பூமியை இரும்பு டாங்கிகளும், பீரங்கி வாகனங்களும் அழுக்குப் பாதங்களும்எம் பூமியை நசிக்க துடியாய்த்துடித்தன. சிங்களத்தளபதிகள் போர்ப் பிரகடனத்தையும், போர்ச் சவாலையும் விடுத்தபடியிருந்தனர்.

இன்னும் ஓர் மூலையில், ஈழத்தை காப்பதற்காய் புலிவீரர்கள் உயிரையே தூசாக்கி, புழுதி மணற் பரப்பிடையே இராணுவ வேலியை ஊடறுத்து, இராணுவ முள்ளென்புகளை முறிப்பதற்காக பகிரதப்பிரயத்தனத்தில்ஈடுபடுகின்றனர். எதிரியின் பிரதேசத்தை அடையும் புலிவீரர்களோ துரதிர்ஷ்டவசமாக எதிரியால் இனங்காணப்பட்டு, உருவாகும் சண்டையில் உயிர்களை அர்ப்பணிக்கும் சமயம் அவர்களது உடலைக்கூட நாம் மீட்க முடியாது போய்விடும். இந்த வேளையிலும் புலிவீரர்கள் தம் இலக்குகளை விடாது தேடி வேவு வேலைகளை தீவிரப்படுத்துவர். அத்தகைய விசேட வேவுப் பிரிவின் ஒரு போராளிதான் பீற்றர் குடாநாட்டை கைப்பற்றுவோம் எனசூள் உரைத்த இனவெறியர்களை, முக்கிய சிங்கள தளபதிகளை, இராணுவ இயந்திரத்தை உயிரூட்டும் சக்திகளை ஒட்டுமொத்தமாக அழித்து ஆயிரக்கணக்கான தமிழரது உயிர்களையும், லட்சக்கணக்கான பெறுமதி கொண்ட ஈழ வளங்களையும் காப்பாற்றிய பெரும்பணியில் ஈடுபட்டவன் இவன்.

எமது தலைவர் கூறுகின்ற ''தோல்விகளைக்கண்டு பின்வாங்காதே தோல்விகளில் வரும் தவறுகளைத்திருத்த முற்படுங்கள் வெற்றிகிட்டும், விடாமுயற்சியும், நம்பிக்கையும், ஆர்வமும் எமக்கு வெற்றியை ஈட்டித்தரும்'' என்பதையே பீற்றர் செயல்வடிவில் மேற்கொண்டு தேசத் தலைவரிடமே பாராட்டையும், பரிசிலையும் பெற்றுக்கொண்டான்.

ஆம், பீற்றர், இவன் முன்னெடுத்துச் செல்லும் தாக்குதல்கள் யாவும் வெற்றியாக அமைவதுடன் எதிர்பார்க்கின்ற மிகப்பெரிய இலக்கையும், அடையச் செய்பவை. ஏனெனில் பீற்றர் எதையுமே செய்ய முடியும் என்ற நம்பிக்கையும், இடைவிடாத முயற்சியையும், மிகுந்த திறமையும் உடையவன் இவனது இழப்பு எம்மிதயங்களை ஒரு கணம் உலுப்பி உள்ளத்தின் ஒவ்வொரு மூலையிலும் வலியைப் பரப்பியதொன்று வரலாறு காணாத வெற்றியின் பின்னணியில் எமைத்தேம்ப வைப்பதாய் இவன் மரணம் அமைந்தது. இவன் இன்னமும் வாழ்ந்திருந்தால் இன்னமும்பலமான இலக்குகளை தகர்க்க வழிவகுத்திருப்பான் என எண்ணுகையில் இதயம் கனக்கின்றது.

அபார துணிச்சலோடு ஓய்வின்றி உழைக்கும் இவனது வரலாறு மிக நீண்டது எம்மியக்கத்தில் முழுமையான போராளியாக இணைவதற்கு முன்னமே பல துணிச்சலான சாதனைகளை படைத்துள்ளான். இந்திய ஆக்கிரமிப்பு; புயலிலும் போர்மழையிலும் எம்தேசம் தவிக்கையில் எமது போராட்டவடிவத்தைமாற்றி தலைமறைவு கெரிலாப் போர் படையாக செயற்படுகையில் இவனது கிராமத்துக்கு சென்ற அன்றே இவனை சந்திக்க முடிந்தது எதிரியின் தேடுதல் வலையில் இருந்து இவனது கிராமத்து மரங்களும், பசுமையான கழனிகளும், பாசமான மக்களும் எம்மைக்காத்து அரவணைத்தமை மறக்க முடியாது. எமது வெற்றிக்கான தளங்களை அமைத்துத்தந்த தேசாபிமானிகளுள் இவர்களும் அடங்குவர் இவர்களும்எம்மை அரவணைப்பதோடுமட்டுமல்லாது எதிரியை அழிக்கும் வழிவகைகளை நாம் மேற்கொள்ள பீற்றர் பெருமளவு உதவினான் நாம் தலைமறைவாக இருந்த வேளை, வெளியில் சென்று சகல வேலைகளையும் மிகப்பொறுப்புடன் செய்து தருவதில் இவன் கண்ணாக இருந்தான். எவரையுமே சந்தேகமாக நோக்கும் அந்நியனின் கூடாரத்திற்கே சென்று அவனைப்பற்றிய பூரண தகவல்களை திரட்டுவதில் இருந்து, மக்களிடம் உணவைப் பெற்று எமக்குத்தருவது வரை, சகல பணிகளையும் முன்னின்று செய்பவன் இவன்தான்.

இச்சமயத்தில் எங்கே இவன் கைது செய்யப்பட்டு தாங்கொணா சித்திரவதையினால் எமை இனங்காட்டி விடுவானோ எனும் அச்சம் உள்ளூர எமக்கு எழுவதுண்டு எத்தகைய மறைவிடங்களில் நாம் மறைந்திருந்தாலும் காலையில் பீற்றரில்தான் அனேகமாக விழிப்போம் அத்துணை ஆர்வமும் விவேகமும் உடையவன். அக்காலகட்டத்தில் நாம் அப்பகுதியில் ஆக்கிரமிப்பாளர்கள் மீதும், அடிவருடிகள் மீதும் நடாத்திய பல தாக்குதல்களில் அதிகமானவை பீற்றரினால் வேவு பார்க்கப்பட்டு ஒழுங்கு செய்யப்பட்டவையாகும். ஆக்கிரமிப்பாளர்களை திகில்கொள்ளவைத்த இத்தாக்குதல்களில் முக்கிய பங்காளன் இந்த சயனைட் வில்லை அணியாது எதிரியோடு நட்பாகப்பழகி வீதிகளில் திரியும் பீற்றர் தான் என்பதை இறுதிவரை அந்நியர் அறியவில்லை.

இந்திய ஆக்கிரமிப்புக் காலம் ஒரு அதிகாலைப் பொழுது, இருளை மெதுவாக விரட்டிய வண்ணம் ஒளியேற்றிக் கொண்டிருந்த வேளை ஒரு பரந்த மரத்தின் அடிவாரத்தில் என்னைத் துயில் கலைத்து எழுப்பினான் பீற்றர். முந்திய தினம் படையினரால் அதிக தூரம் துரத்தப்பட்ட களைப்பு உடலை இன்னமும் விட்டகலாமல் சோம்பல் முறித்தவாறு, 'என்னடாப்பா?' இலேசான எரிச்சலோடு வினவினேன். 'அண்ணை முதலில் ரீயைக் குடியுங்கோ, முக்கியமான ஒரு விசயமிருக்கு' இனிய சிரிப்பொன்று தவழ்ந்தது 'என்ன என்ன விசயம் கெதியில் கூறு' அவசரப்படுத்தினேன்

'அண்டைகுச் சொன்ன மாதிரி நேற்றம்போய்ப்பார்த்திட்டன் அதோட அவனோட அரை மணித்தியாலம் இருந்து கதைச்சிட்டு 'பிறணையும்' தூக்கிப் பார்த்திட்டு வந்திட்டன். நம்ப முடியாதவாறு 'என்னன்டடா போனனீ' வினவ, 'என்னமோ அவனுக்குக் கெட்ட காலமாக்கும் சினேகிதம் பிடிச்சாச்சு, அண்டைக்குப் பார்த்த வேம்புக்குக் கீழே பத்துப் பேர் தான் இருக்கிறான்கள். இஞ்சால மாமரமூலையில் 'பிறண்' கிடக்கு. கொஞ்சம் எட்டத்தில 'கால் கஸ்ரோ' இருக்கு, ஏமலாந்திக் கொண்டு இருக்கிறான். வடிவாய் போய்க் குடுத்தா இனி உங்களைத் தேடமாட்டான்' உறுதியாக அவன் வார்த்தைகளைச்சிதற நான் சிந்தனையில் ஆழ்ந்தேன். 'இனியும் நீங்கள் அடிக்காட்டி நான் பிறணைக் கொண்டு ஓடித்தான் வருவேன்' அவனது உறுதியான பேச்சும் சிறந்த வேவும்எம்மை புது வேகத்துடன் ஒரு சண்டையை நடாத்த வைத்தன, ஒவ்வொரு பிரதேசத்திலும் சிதறியிருந்த எங்கள் வீரர்களை ஒன்று திரட்டி தாக்குதல் திட்டம் தீட்டப்பட்டது.

அக்காலசட்டத்தில் எம்மில் ஒருசிலர் தென்படினும் மக்கள் வீடுகளை விட்டு ஓடுவதும், அதனைஎதிரி அறிந்து அப்பிரதேசத்தை சல்லடையிடுவதனாலும் எமது மக்களின் முன்னால் கூட மறைந்து செல்லவேண்டியிருந்தது இவ்வாறு இருக்கையில் ஒரு துணிகரத்தாக்குதலை எங்ஙனம் நடாத்துவது? அதுவே எம் சிந்தனையைநிறைத்திருந்தது

'அண்ணை உதுக்கு வழி ஒரு லொறி பிடிச்சு பொது சனம் மாதிரி நைசாப் போய் அடிக்கிறதுதான், நான் லொறிக்கு முன்னால ஒரு நூற்றைம்பது யாரில் போய் நிலைமையைப் பார்க்கிறேன். சரியெண்டா அடியுங்கோ, இல்லாட்டி நைசா இறங்கி மாறுங்கோ, நான் எப்பிடியும் வந்திடுவன்' அவனது ஆலோசனைகள் ஏற்றதாக அமையவே அணிகளைத் தயார் படுத்திய பின் லொறி தேட ஆரம்பித்தோம். இறுதியில் ஒரு பிறேக் அற்ற (நகைச்சுவையாக போர்த்துக்கேயரது என்போம்) லொறியே கிடைத்தது. மேஜர் ஸ்ரீ சாரதி ஆசனத்தில் வெற்று மேனியோடு தலைப்பாகையோடு அமர்ந்திருக்க, நானும் அதே கோலத்தில் அருகில் அமர்ந்து கொள்ள பின்புறம் யாவரும் பதுங்கியிருந்தனர்.

'அண்ணை இவன் சொல் வழி கேளாமல் முன்னுக்குப் போறான், அவன் கூப்பிட்டுக் கதைச்சானெண்டால் இவனும் வீணா மாட்டுப்படப்போறான்' ஸ்ரீ கூற நான் சிந்திக்கும் போது பீற்றர், உற்சாகமாக ஏதோ பாடலை முணுமுணுத்தபடி சைக்கிளை மிதிக்க ஆரம்பித்தான். 'கிட்ட வந்திட்டம் பிறேக்கை மெதுவாப்பிடி' கூறினேன். ஸ்ரீ பலங்கொண்ட மட்டும் அமத்தி இயலாது விட தட தட சத்தத்துடன் லொறி கட்டுப்பாடு இல்லாது மெதுவாக நெருங்கியது சமீபத்தில் சென்று எதிரியைக் கடந்தவன் கையை உயர்த்தி தலையைச் சொறிந்தபடி செல்ல நாம் உசாரானோம். திடீரென எம்மிதயங்கள் நின்று இயங்கின. எமக்கும் பீற்றருக்கும் இடையாக வீதியின் விளிம்பில் திடீரென சுமார் 10இந்தியப்படையினர் ஒழுங்கையால் வந்து ஏறினர். அவர்களில் ஒருவன் அப்பகுதி படைப்பொறுப்பாளன். நிலைமை கட்டு மீறிவிடவே சுமார் 3யார்தொலைவில் நின்ற சில எதிரிகள் மீது கைக்குண்டை வீசி சண்டையை ஆரம்பித்து வைத்தோம். எதிர் பாராத தாக்குதலினால் எதிரிகள்கணப்பொழுது திகைத்த வேளை லொறியின் பின் பக்கத்தின் ஊடாக அம்பு போலப் பாய்ந்து எமது போராளிகள் தாக்கத் தொடங்கினர். நாம் எதிர் பார்த்ததை விட அதிக எதிரிகள் நம் குண்டு மழையில் குளிக்க வேண்டி ஏற்பட்டது, எஃகு உறுதி படைத்த எம் வீரர்கள் சடுதியாசப் பாய்ந்து தாக்க எதிரிகள் ஓட ஆரம்பித்தனர். சொற்ப நேரத்தில் அப்பகுதியை கட்டுப்பாட்டினுள் கொணர்ந்து 14 இந்திய இராணுவத்தை கொன்று 9 ஆயுதங்ககளையும், ஏராளமான இராணுவத் தளபாடங்களையும் கைப்பற்றினோம்.

இச்சண்டையில் ஓர் உறுதிமிக்க இளம் வேங்கை கப்டன் கில்மன் வீரச்சா வெய்தி எமை மீளாச்சோகத்தில் ஆழ்த்தினான். நண்பனை இழந்த வேதனைச் சுமையோடும் வெற்றிப் பெருமிதத்தோடும் துரிதமாக பின்வாங்கினோம்.

தற்செயலாகத் திரும்பிப் பார்த்த வேளை எனக்குஅதிர்ச்சியும் கடும் கோபமுமே ஏற்பட்டது. ஏனெனில் சந்தியிலே சைக்கிளில் சாய்ந்தவாறு சிறிதும் அச்சமின்றிபீற்றர்எமைப்

[5ஆம் பக்கம் பார்க்க]



தலைவர் பிரபாகரனிடம் வேவுப்புலி மேஜர் கார்வண்ணன் 12-09-92 இல் பரிசில்களை பெற்றபோது பிடிக்கப்பட்ட படம்.

## புதிய நூல்!...புதிய திருப்பம்?

## சுயாட்சி

குறிப்பார்க்க ஆரம்பித்தன. புனிதமான இத்தாயக பூமியை இரும்பு டாங்கிகளும், பீரங்கி வாகனங்களும் அழுக்குப் பாதங்களும்எம் பூமியை நசிக்க துடியாய்த்துடித்தன. சிங்களத்தளபதிகள் போர்ப் பிரகடனத்தையும், போர்ச் சவாலையும் விடுத்தபடியிருந்தனர்.

இன்னும் ஓர் மூலையில், ஈழத்தை காப்பதற்காய் புலி வீரர்சள் உயிரையேதூசாக்கி, புழுதி மணற் பரப்பிடையே இராணுவ வேலியை ஊடறுத்து, இராணுவ முள்ளென் புகளை முறிப்பதற்காக பகிரதப்பிரயத்தனத்தில்ஈடுபடுகின்றனர்.எதிரியின் பிரதேசத்தை அடையும் புலிவீரர்களோ துரதிர்ஷ்டவசமாக எதிரியால்

யும், ஆர்வமும் எமக்கு வெற்றியை ஈட்டித்தரும்'' என்பதையே பீற்றர் செயல்வடிவில் மேற்கொண்டு தேசத் தலைவரிடமே பாராட்டையும், பரிசிலையும் பெற்றுக்கொண்டான்.

ஆம், பீற்றர், இவன் முன்னெடுத்துச் செல்லும் தாக்குதல்கள் யாவும் வெற்றியாக அமைவதுடன் எதிர்பார்க்கின்ற மிகப்பெரிய இலக்கையும், அடையச் செய்பவை. ஏனெனில் பீற்றர் எதையுமே செய்ய முடியும் என்ற நம்பிக்கையும், இடைவிடாத முயற்சியையும், மிகுந்த திறமையும் உடையவன் இவனது இழப்பு எம்மிதயங்களை ஒரு கணம் உலுப்பி உள்ளத்தின் ஒவ்வொரு மூலையிலும் வலியைப்

வரை, சகல பணிகளையும் முன்னின்று செய்பவன் இவன்தான்.

இச்சமயத்தில் எங்கே இவன் கைது செய்யப்பட்டு தாங்கொணா சித்திரவதையினால் எமை இனங்காட்டி விடுவானோ எனும் அச்சம் உள்ளூர எமக்கு எழுவதுண்டு எத்தகைய மறைவிடங்களில் நாம் மறைந்திருந்தாலும் காலையில் பீற்றரில்தான் அனேகமாக விழிப்போம் அத்துணை ஆர்வமும் விவேகமும் உடையவன். அக்காலகட்டத்தில் நாம் அப்பகுதியில் ஆக்கிரமிப்பாளர்கள் மீதும், அடிவருடிகள் மீதும் நடாத்திய பல தாக்குதல்களில் அதிகமானவை பீற்றரினால் வேவு பார்க்கப்பட்டு ஒழுங்கு செய்



தலைவர் பிரபாகரனிடம் வேவுப்புலி மேஜர் கார்வண்ணன் 12-09-92 இல் பரிசில்களை பெற்றபோது பிடிக்கப்பட்ட படம்.

சலோடு வினவினேன். 'அண்ணை முதலில் ரீயைக் குடியுங்கோ, முக்சியமான ஒரு விசயமிருக்கு' இனிய சிரிப் பொன்று தவழ்ந்தது 'என்ன என்ன விசயம் கெதியில் கூறு' அவசரப்படுத்தினேன்

'அண்டைகுச் சொன்ன மாதிரி நேற்றம்போய்ப்பார்த்திட்டன் அதோட அவனோட பேச்சும் சிறந்த வேவும்எம்மை புது வேகத்துடன் ஒரு சண்டையை நடாத்த வைத்தன, ஒவ்வொரு பிரதேசத்திலும் சிதறியிருந்த எங்கள் வீரர்களை ஒன்று திரட்டி தாக்குதல் திட்டம் தீட்டப்பட்டது.

அக்காலசட்டத்தில் எம்மில் ஒருசிலர் தென்படினும் மக்கள் வீடுகளை விட்டு ஓடுவ ஒரு பிறேக் அற்ற (நகைச் சுவையாக போர்த்துக் கேயரது என்போம்) லொறியே கிடைத்தது.மேஜர் ஸ்ரீ சாரதி ஆசனத்தில் வெற்று மேனியோடு தலைப்பாகையோடு அமர்ந்திருக்க, நானும் அதே கோலத்தில் அருகில் அமர்ந்து கொள்ள பின்புறம் யாவரும் பதுங்கியிருந்தனர்.

ங்களையும், ஏராளமான இராணுவத் தளபாடங்களையும் கைப்பற்றினோம்.

இச்சண்டையில் ஓர் உறுதிமிக்க இளம் வேங்கை கப்டன் கில்மன் வீரச்சா வெய்தி எமை மீளாச்சோகத்தில் ஆழ்த்தினான். நண்பனை இழந்த வேதனைச் சுமையோடும் வெற்றிப் பெருமிதத்தோடும் துரிதமாக பின்வாங்கினோம்.

தற்செயலாகத் திரும்பிப் பார்த்த வேளை எனக்குஅதிர்ச்சியும் கடும் கோபமுமே ஏற்பட்டது. ஏனெனில் சந்தியிலே சைக்கிளில் சாய்ந்தவாறு சிறிதும் அச்சமின்றிபீற்றர்எமைப்

[5ஆம் பக்கம் பார்க்க]

# உயர்மின்கடத்திகளை கண்டு பிடிப்பதில் பத்தாண்டுகளில் பாதித்தூரம் வந்துவிட்டனர்

எத்தகைய இழப்புகளுமின்றி மின்சாரத்தைக் கடத்தக்கூடிய பதார்த்தம் ஒன்றைக் கண்டுபிடிப்பதில் உலகம் முழுவதிலுமுள்ள விஞ்ஞானிகள்ஈடுபட்டுள்ளனர். அவர்கள் இதனை உயர்கடத்தி (Super conductor) என அழைக்கின்றனர்.

ஒவ்வொரு பதார்த்தமும் மின்சாரத்தைக் கடத்தும் அளவைக் கொண்டு வகைப்படுத்தும் போது, ஆரம்பத்தில் இரு வகையினதாக பிரிக்சப்பட்டன. மின்னைக் கடத்தும் பதார்த்தங்களைக் கடத்திகள் எனவும் மின்னைக் கடத்தாத பொருள்களை காவலிகள் என்றும் பெயரிட்டனர்.

அநேகமாக உலோகங்கள் கடத்திகள் ஆகும். இவற்றை மின்சாரத்தை ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்குக் கொண்டு செல்ல பயன்படுத்துகின்றனர்.

பிளாஸ்ரிக், மரம், மட்பாண்டம் போன்றவை காவலிகள், இவற்றை மின்சாரத் தாக்குதலிலிருந்து மனிதரைப் பாதுகாக்க பயன்படுத்துகின்றனர். மின்கம்பிகள் காவலிகளால் மூடப்பட்டு இருப்பதனாலேயே அவற்றை தொடக்கூடியதாக உள்ளது.

பின்னர் இன்னொருவகையான பதார்த்தங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை மின்சாரத்தை சிறிதளவில் கடத்துவனவாக இருந்தன. அதாவது கடத்திகள் போல தொழிற்படாவிட்டாலும் ஓரளவு மின்சாரத்தைக் கடத்துவனவாக இருத்தன இவை அரைக் கடத்திகள் (Semi conductors) என அழைக்கப்படுகின்றன. இவற்றின் கண்டுபிடிப்பே இலத்திரனியல் கருவிகளின் வளர்ச்சிக்குப் பேருதவியாக இருந்தது. ரான்சிஸ்டர்கள் அரைக்கடத்திகளால் ஆக்கப்பட்டவையாகும்.

உலோகங்கள் மின்னைக் கடத்துவனவாக இருந்த போதிலும் வெவ்வேறு உலோகங்களின் கடத்தும் திறன் வெவ்வேறு அளவினதாகும். ஒப்பீட்டளவில் செப்பின் கடத்துதிறன் அலுமினியத்தின் கடத்துதிறனிலும் அதிகமானதாகும்.

அதாவது கடத்திகள் மின்சார்த்தைக் கடத்துபனவாக இருந்தபோதிலும் அவை மின்னோட்டத்திற்கு குறிப்பிட்ட அளவு தடையையும் ஏற்படுத்திவருகின்றன. இத்தடையினால் சக்தி இழப்பு ஏற்படுகிறது. இச்சக்தி இழப்பு வெப்பமாக வெளியிடப்படுகிறது.

இவ்வாறான தடை நீண்ட தூரத்திற்கு மின்சாரத்தை எடுத்துச் செல்வதைத் தடுக்கிறது. அதனாலேயே மின்சாரம் மின்மாற்றிகள் உபயோகிக்கப்பட்டு உயரழுத்தத்தில் தூர இடங்களுக்கு அனுப்பப்பட்டபின் மீண்டும் மின் மாற்றிகளை உபயோகித்து தேவையான அழுத்தத்தில் பெறப்படுகிறது. மேலும் தூரம் கூடும் போது அதிஉயர் அழுத்தம் தேவைப்படுகிறது. அத்துடன் பெருமளவு சக்தி இழப்பும் ஏற்படுகிறது-

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இரண்டு பிரெஞ்சு விஞ்ஞானிகள் தாழ்ந்த வெப்ப நிலையில் மின்சாரத்தை தடை எதுவுமின்றி -அதாவது மின் தடை பூச்சியமாகவுள்ள பதார்த்தம் ஒன்றைக் கண்டு பிடித்தனர்: இப்பதார்த்தம் -233(சய 233) பாகை சென்ரி கிரேட்டில் மின்னை தடை எதுவுமின்றிக் கடத்தியது- இதனை அவர்கள் உயர் கடத்தி (Super conductor) என அழைத்தனர்-

இக்கண்டுபிடிப்பானது உயர் வெப்பநிலையில் - அதாவது அறை வெப்ப நிலையில் மின்சாரத்தைக் தடையின்றிக் கடத்தும் பதார்த்தத்தைக் கண்டு பிடிக்கும் ஆராய்ச்சியில் இறங்க விஞ்ஞானிகளைத் தூண்டியது.

இவ்உயர் கடத்திகள் செப்பு ஒட்சிசன் போன்றவற்றுடன் லன்தனம் பேரியம் என்னும் மூலகங்களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டது-

மிக அண்மைக்காலத்தில் ஓசாகா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் - 100 (சய 100) பாகை சென்ரிகிரேட்டில் தடையின்றி மின்னைக் கடத்தும் பதார்த்தம் ஒன்றைக் கண்டு பிடித்துள்ளனர். தாழ்ந்த வெப்ப நிலையிலும் மின்சாரத்தைத் தடையின்றி கடத்துகின்றது. இது ஏறத்தாழ எட்ட வேண்டிய தூரத்தின் அரைவாசியாகும்.

லேசர் கதிர்களைப் பயன்படுத்தி செப்பு ஒட்சைட்டையும் கல்சியத்தையும் கொண்டு மிக மெல்லிய நூறு படைகள் அமைக்கப்பட்டன. இந்தப் படலத்தின் மொத்தத்தடிப்பு மூன்று லட்சத்தில் ஒருபங்கு மில்லிமீற்றர் ஆகும். இப்படலமானது ஆகக்கூடியது - 100 (சய100) பாகைசென்ரிகிரேட்டில் மின்னைத் தடையின்றிக் கடத்தியது.

அநேகமான மின்கருவிகள் உபயோகிக்கப்படும் போது பெருமளவு வெப்பத்தைவெளி விடுவது அக்கருவிகள் பழுதடைய வாய்ப்பாக அமைகிறது. மேலும் தொடர்ச்சியாக நீண்ட நேரம் உபயோகிப்பதற்கும் இது தடையாக அமைகிறது.

உயர் கடத்துதிறன் கொண்ட பதார்த்தங்களை உபயோகித்து இலத்திரனியல் கருவிகள் தயாரிக்கப்பட்டால் மிக நீண்டநேரம் தொடர்ச்சியாக அவற்றை உபயோகிக்கலாம் என்பது இத்தகைய பதார்த்தம் ஒன்றைக் கண்டுபிடிப்பதில் விஞ்ஞானிகளுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது விசேடமாக தொடர்ச்சியாக நீண்ட நேரத்திற்கு உபயோகிக்கப்படும் கணணிகளுக்கு இத்தகைய பதார்த்தம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இப்பதார்த்தம் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட முடியுமானால் மின்மாற்றிகளின் உபயோகம் தேவையற்றதாகும் ஏனெனில் தடை எதுவும் இன்மையால் உயரழுத்தம் தேவையற்றதாகும். மேலும் பெருமளவு மின்சக்தி வீணாகாது தடுக்கப்படும்,

இத்தகையதொரு பதார்த்தத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் மேலும் 130 பாகை சென்ரி கிரேட் அளவு வெப்ப நிலை உயர்ச்சியை எட்ட வேண்டியுள்ளது. மேலும் இதன் எல்லை என்ன என்பதும் கேள்விக்குரிய ஒன்றாகும்

எனினும் தற்போதுள்ள தொழில் நுட்ப வளர்ச்சியின் வசதிகளைக் கொண்டு இத்தகைய பதார்த்தமொன்றைக் கண்டுபிடிக்க நீண்ட காலம் எடுக்காது என்பது விஞ்ஞானிகளின் நம்பிக்கையாகும் பத்தாண்டு காலத்தில் பாதித்தூரம் கடந்துவந்துள்ள விஞ்ஞானிகள் மீதித்தூரத்தையும் கடந்துவிட்டால் ஓர் அரிய பொருள் மனித குலத்திற்கு கிடைக்கும் என்பது வெளிப்படை.

**வேலவன்**

## புதிய நூல்!...புதிய திருப்பம்?

### நூல் அறிமுகம்

வணிகத்தின் உலகத் தலைநகரான நியூயோர்க்கில் கடந்த கோடையில் ஒரு நூல் ஆங்கிலத்தில் வெளியானது. 'இது ஒரு வேறுபட்ட நூல்' என்று நூலின் முகப்பே ஓர் எண்ணத்தை உருவாக்கி விடுகின்றது. மூன்பக்க முழுப் பக்கத்தில் மூன்றில் இரண்டு பகுதியை புத்தபெருமானின் சிலை வடிவம் ஆட்கொண்டு விடுகிறது. தூய்மையின் வடிவமாகவோ அன்றேல் 'நிர்வாண' நிலையின் உருவகமோ - புத்தரின் சிலை வடிவு வெள்ளையாகத் தோன்றுகிறது. புத்தபெருமானின் தலையின் இடப்பக்கத்தில் (நூலின் வலப்பக்கக் கோணத்தில்) தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னம் மஞ்சளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. நீலப் பின்னணியில் முன்பக்கத்து மூன்றில் இருபகுதியில் தமிழ் எழுத்துக்களும் ஒரு பகுதியில் சிங்கள எழுத்துக்களும் மங்கலாகத் தெரிகின்றன.

நூலின் தலைப்பு:- Only Man is Vile; the Trapeay ofSri Lanka இத்தலைப்பை மொழி பெயர்ப்பின் இழிந்தவன் மனிதன் ஒருவனே: சிறிலங்காவின் அவலம். இந்தத் தலைப்பையும், முன்பக்கப் படத்தையும் வைத்தே ஒரு விமர்சனக் கட்டுரை வரையலாம் போன்று பல எண்ண அலைகள் எழுகின்றன. விமர்சனமான தலைப்பு.

நூலாசிரியர்; வில்லியம் மக்கவன்(William McGowen வில்லியம் நியூயோர்க் சஞ்சிகை நிருபர். பல சஞ்சிகைகளில் இவரின் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. புகழ்பெற்ற அபிப்பிராயங்களை உருவாக்கும் சக்தியுள்ள நியூயோர்க் ரைம்ஸ் சஞ்சிகையில் வில்லியத்தின் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. வில்லியம் ஈராண்டுகள் இத்தீவில் தங்கியிருந்து இனப்பிரச்சினையை, போர் நிலைப்பாடுகளை அலசி, ஆராய்ந்து இந்நூலை வரைந்துள்ளார்.

இனப்பிரச்சினை இத்தீவில் வளர்வதற்கும், பிரச்சினைதீர்க்கப்படாது இருப்பதற்கும் மூலகாரணமாக இருப்பவர்கள் பௌத்தகுருமார் என்று துணிந்து சுட்டிக்காட்ட முனைந்துள்ளார், நூலாசிரியர் பலவிடயங்களை போர்க்காலச் சம்பவங்களை நேரில் பார்த்து வருணித்துள்ளார். தனது அனுபவங்களை அப்பட்டமாக வரைந்துள்ளார். இலங்கை மக்களை சிறுமைப்படுத்தும் வசனங்களும் இல்லாமல் இல்லை,

இலங்கையின் இனப்பிரச்சினையையிட்டு ஒரு மேற்கு நாட்டவர் எழுதிய முதல் பெரிய நூல் இதுவென்று துணியலாமா? அத்துடன் இனப்பிரச்சினைக்கு மூலகாரணமென்று இனங்காட்ட ஒரு மேற்கு நாட்டவர் முனைவதும் முதல் முயற்சிதானே? ''குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் போவதே இலங்கையின் அவலம்'' என்று சில வருடங்களின் முன் இலங்கையின் இனப்பிரச்சினையையிட்டு உரையாற்றிய ஒக்ஸ்போட் பல்கலைக்கழக டேவிட் செல்போண் கூறியது இவ்விடத்தே குறிப்பிட்டுஒப்பிடத் தகும்

இந்தப்புதியநூலைப் படிக்கும்பொழுது, மேற்குநாடுகளின் அரசியல் சிந்தனையில் இந்நூல் ஒரு புதிய திருப்பத்தைக் கொண்டுவருமா என்று கேட்கத் தூண்டுகிறது

க செ

## சுயாட்சி

கொலம்பஸின் 500 ஆவது ஆண்டில் நகர சேரிகளில வசிக்கும் மொஹாக்ஸ் உட்பட ஆர்க்டிக்கில் வசிக்கும் எஸ்கிமோக்கள் வரையிலான கனடாவின் சுதேசிகள் தங்களைத் தாங்களே ஆளும் அரசியலமைப்பு உரிமைகளைப் பெறும் முதலாவது வட அமெரிக்க பூர்வீகக் குடிகளாக இருப்பர்.

ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன் ஐரோப்பியர் குடியேற ஆரம்பித்த காலத்தில் வாழ்ந்த இந்த ஆதிவாசிகளுக்கு சுயாட்சி வழங்கும் வகையில் கனடா அரசியலமைப்பு திருத்தப்படவுள்ளது.

பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் குடியேறியபோது ஆதிவாசிகளின் உரிமையைப் பறித்து அவர்களின் நிலத்தில் தங்கள் குடியேற்றங்களை அமைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தங்களின் நிலப்பகுதி, நீர், எண்ணெய் வாயு, கனிப் பொருட்கள், காடுகள் உட்பட 2300 இடங்களிலுள்ள இயற்கை வளங்களை நிர்வகிக்க ஆதிவாசிகளுக்கு அதிகாரம் அளிக்கப்படும்.

தங்கள் கலாசாரம் பாரம்பரியம், மறைந்து வரு. தங்கள் 53 சுதேச மொழிகளை உயிர்ப்பித்தல் ஆகியவற்றைப் பேண விரும்பும் 600 ஆதிவாசிப் பிரிவுகளுக்கு இது ஒரு பெரும் வெற்றி எனக் கருதப்படுகிறது.

சுயாட்சியை மீண்டும் பெறுவது பெர்லின் சுவரை இடிப்பதற்கு ஒப்பாகும் என கனேடிய சுதேசிகள் சபைத்தலைவர் தொன்ஜோர்ஜ் நிருபர் மகாநாடு ஒன்றில் கூறினார்.

நுனாவுல் (எங்கள் நாடு) என அழைக்கப்படும்இப்புதியசுயாட்சிப்பகுதி 7,70'000 சதர மைல்களை கொண்டுவிளங்கும்

இதற்கிடையில் புதிய உலகைக் கண்டு பிடித்த கொலம்பஸின் 500 ஆவது ஆண்டு தினம் அணிவகுப்பு, எதிர்ப்பு ஆகியவற்றைப் பிரதிபலிப்பதாக இருந்தன.

சிங்களப்புத்தி ஜீவிகளும் பத்திரிகையாளர்களும் தற்போது கல்வி, வேலையின்மைப் பிரச்னையின் மீது அதிக அக்கறை செலுத்துகின்றனர். ''ஐலண்ட்'' பத்திரிகை இதுபற்றிப் பல கட்டுரைகளை வெளியிட்டு வருவதுடன் 4-10-92 அன்று தனது ஆசிரிய தலையங்கத்தில் இலங்கையின் கல்விமுறை பற்றிப் பெரிதும் சாடி எழுதியுள்ளதுடன் இதனால் ஏற்படக்கூடியவிளைவுகளைப் பற்றியும் பெரிதும் எச்சரித்துள்ளது. பத்து இலட்சத்துக்கும் அதிகமான இளைஞர்கள் வேலையற்றிருப்பதையும், நாட்டின் அமைதிக்கு இது எவ்வளவு பங்கமாய் அமையும் என்றும் கூறிய அப்பத்திரிகை இதற்கான பொறுப்பை அரசியல் கட்சிகளிடமும் பிழையான கல்வி முறையின் மீதும் சுமத்தியுள்ளது.

பிரேமதாஸா தலைமையிலான இரண்டாம் கட்டத் திறந்த பொருளாதார அமைப்பானது நாட்டின் கல்வி முறையிற் பல புதிய மாற்றங்களை வேண்டி நிற்கின்றது. இவ்வாறாகத் தேவைப்படும் கல்வி முறையானது இலங்கையின் சுதேச பொருளாதார மற்றும் தொழில் முறை வளர்ச்சிக்கு உகந்ததாய் இல்லாமல் அந்நிய நாடுகளின் வர்த்தக நோக்கிலான சேவைத்துறைக்கே அதிகம் பயன்பாடுடையதாக அமையும் அதேவேளை இம்முறைமைஈழத்தமிழ்மண்ணை இன்னும் பல வழிகளிற் பாதிக்கக் கூடியதாய் அமையும்.

ஜே ஆர். தலைமையிலான முதலாவது திறந்த பொருளாதார அமைப்பின் கீழ் உயர்கல்வி வாய்ப்பற்ற இளைஞர்களின் தொகை ஒருபுறம் பெருகியதுடன் மறுபுறம் க. பொ. த. (சதாரணதரம்) மற்றும், க. பொ. த. (உயர்தரம்) ஆகியவற்றிற்கு மேற் கல்வி கற்று வேலைவாய்ப்பற்றஇளைஞர்களின் தொகையும் பல்மடங்காய்ப் பெருகியது. இவ்வாறாக பத்து இலட்சம்இளைஞர்கள் வேலையற்றிருக்கின்றனர். இவர்களுள் 7425 பட்டதாரிகள் வேலையற்றவர்களாகவும் இருக்கின்றனர் குறிப்பாகச் சிங்களவர் மத்தியிற் பெருகிவரும் உயர்கல்வி வாய்ப்பின்மை, வேலைவாய்ப்பின்மை பற்றிச் சிங்களப் புத்திஜீவிகளும் பத்திரிகைகளும் அபாயமணி அடிக்கத் தவறவில்லை. தமிழரிற்கு எதிரான தரப்படுத்தல் மூலமாகவோ, அன்றி விகிதாசார ரீதியானது என்று கூறிக்கொண்டு வேலைவாய்ப்பிற் தமிழருக்கு பாரபட்சம் காட்டப்பட்டதன் மூலமாகவோ

# பொருத்தமான கல்வியின் தேவை

யாது.

ஆட்சி அதிகாரத்திற்கு வருவதற்காகச் சிங்களக் கட்சிகள் மேற்படி கல்வி, வேலைவாய்ப்புப் பிரச்சினைகளுக்கு இனவாத விளக்கமளித்து தமிழரைத் தீவிரமாக ஒடுக்கினர். ஆனால், இது விடயத்தில் எத்தகைய இனவாதம் பேசியும் இனிப்பயனில்லை என்ற நிலை வந்த பின்பு சிங்களப் புத்திஜீவிகளும், தென்னிலங்கைப் பத்திரிகைகளும் இன்று அதனைக் கல்வி முறையில் உள்ள குறைபாடு என்ற கண்ணோட்டத்திற்பேசத் தொடங்கியுள்ளதுடன் மீண்டும் ஜே. வி பி. யின் 1971 கிளர்ச்சி, 1987 கிளர்ச்சிகள் பற்றிப் பேசவும், எழுதவும் எச்சரிக்கவும் தொடங்கியுள்ளனர்.

ஒவ்வொரு புதிய அரசாங்கமும் மாறிமாறிக் கடைப்பிடிக்கும் புத்திசாதுரியமற்ற கல்விமுறை மாற்றங்கள்பற்றி மேற்படி சிங்களப் புத்திஜீவிகள் கண்டிக்கத் தொடங்கியுள்ளனர் மேலோட்டமானதும் குறுகிய கால அரசியல் நோக்கம் கொண்டதும், ஆழ்ந்த புலமையற்றதும், கட்சி நலன்களை அடிப்படையாகக் கொண்டதுமான கல்விமுறை மாற்றங்கள் இலங்கையின் பொருளாதாரக் கல்வி அத்திவாரத்தையே சீரழித்துள்ளன

இந்நிலையில் சிங்களவர்களை விடவும் இரட்டிப்பு மடங்கிலோ அன்றிப் பல்மடங்கிலோ பாதிப்புற்றிருக்கும் தமிழரின் கல்விநிலைபற்றி மிக ஆழமான சிந்தனை தமிழர் மத்தியில் அவசியம்.

தமிழர் மத்தியில் அரசியல் ரீதியான தரப்படுத்தல், வேலைவாய்ப்பின்மை பற்றிக் கதைக்கப்பட்டாலும் கல்விமுறைபற்றிய சிந்தனையும் கலந்துரையாடல்களும், கருத்துப் பரிமாற்றங்களும் அநேகமாக இல்லை என்றே சொல்லவேண்டும், இது சம்பந்தமான நிபுணத்துவம் தமிழர் மத்தியில் வளர்க்கப்படவேண்டும். தமிழரின் இன்றைய கல்வி நிலை பற்றியும், எமக்குத் தேவையான பொருத்தமான கல்விமுறைபற்றியும் போதியளவு நூல்களும் கட்டுரைகளும் தோன்ற வேண்டும். சிங்

வேலையில்லாப் பிரச்சினையையும், கல்விப் பிரச்சினையையும், இளைஞர் பிரச்சினைகளையும், இனவாதத்திற்கு அப்பாற் சென்று சிந்திக்கத் தொடங்கியுள்ளனர் என்பது இத்தகைய சிந்தனையைஇவர்கள் பெறுவதற்கு 1971 ஜே. வி.பி கிளர்ச்சியும் 1987-89 ஜே வி.பி கிளர்ச்சியும் பெரும் புள்ளிவிபரங்களும் இவர்களுக்குத் தேவைப்பட்டன.

பேராசிரியர் வில்லிமென்டிஸ மேற்கோள் காட்டி இம்மாதம் 4-ஆம் திகதி ஐலண்ட் பத்திரிகை எழுதிய ஆசிரிய தலையங்கத்தில் இப்பிரச்சினை பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. காலனித்துவ முறைமைக்கேற்ப உருவாக்கப்பட்ட கல்வி முறையானது தொடர்ந்தும் அப்படியே நீடிக்கின்றதென்றும் நாட்டிற்குப் பொருத்தமானதும் தேவையானதுமான கல்விமுறை இல்லை என்றும் தொழில் சார் கல்விமுறை ஏற்படுத்தப்படவில்லை என்றும் பலவாறாக கூறுவதுடன் அரசியற் கட்சிகளின் குறுகிய நோக்கங்களையும் பெரிதும் சாடியுள்ளது.

பொதுவாகக் கூறுவதாயின் இலங்கையில் பெருமளவுக்குப் புத்தகப்படிப்புக் கல்வி முறையே உள்ளது இது அநேகமாகச் சேவைத்துறைக்கும், நிர்வாக உத்தியோகங்களுக்குமே பொருத்தமுடையதாகக்காணப்படுகின்றதே தவிர தொழில் சார் விடயங்களுக்கும் மற்றும் நிர்மாணிப்புப் பணிகளுக்கும் பொருத்தமற்றதாக காணப்படுவதுடன் ஆழமான ஆய்வுகளுக்கும் பொருத்தமற்றதாக உள்ளது.

இலங்கையின் கல்வியின் நோக்கம் உத்தியோகம்தான் பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம் வரை படிக்கும் ஒவ்வொருவரது எண்ணமும் சேவைத்துறைநிர்வாகத்துறை என்பவற்றில் உத்தியோகம் பெறுவதற்காகப் படிப்பது என்புதுதான் இத்தகைய உத்தியோகத்திற்கு நாட்டின் சனத்தொகையில் மிகச் சிறிய விகிதத்தினரே போதுமானது நாட்டின் முழுச்சிறார்களும் இளைஞர்களும் இதனை நோக்

டைந்த மேலைத்தேசங்களின் கல்வி நிலையோடு இலங்கையை ஒப்பிடுதல் நலம். மேலைத்தேசத்தில் ஒருவர் தான்விரும்பும் ஒரு துறை நோக்கிப் படிப்பதற்கான வாய்ப்பு சிறுபராயத்திலிருந்தே ஒருவருக்கு உண்டு தொழில்நுட்பக்கல்வி கலை, இலக்கியம், நாடகம், ஓவியம், போன்ற துறைகளை நோக்கிய கல்வி, நிர்வாகம், இராஜதந்திரசேவை ஆகிய துறைகளை நோக்கிய கல்வி, விஞ்ஞானக்கல்வி. மற்றும் ஆய்வுத்துறை சார்ந்த கல்வி எனப் பல வாய்ப்புக்கள் உள்ளன. இவற்றிற் கல்வி பயின்று வேலை வாய்ப்பைப் பெறுவதற்கு அரசாங்கம், மற்றும் தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலைகள் உள்ளன பிரதானமாக அறிவியல் ஆய்வுத்துறைகளை பெரும் நோக்கமாகக் கொண்டவர்கள் பல்கலைக்கழக உயர்கல்விக்கும் ஏனையோர் தமது விருப்பத்திற்கு ஏற்ற துறைகளை நோக்கியும் செல்லக் கூடியதாக உள்ளது. இதனால் ஒவ்வொருவரும் தத்தம் விருப்பத்திற்கும் ஆர்வத்திற்கும், திறைமைக்கும் ஏற்ற துறைகளை நோக்கிச் செல்வதற்கான வாய்ப்பு அங்கு கணிசமான அளவு உள்ளதெனலாம். அதேவேளை மேலைத் தேசங்களில் கல்வி, வேலையில்லாப்பிரச்சினைகள் முற்றாகத் தீர்ந்துள்ளன என்பது இதன் அர்த்தமல்ல. இலங்கையை விடவும் இதனைத் தீர்ப்பதற்கான வாய்ப்புக்களையும் அமைப்புக்களையும் அவர்கள் கொண்டுள்ளார்கள் என்பதே உண்மை. அதேவேளை அவர்களுக்குப் பொருத்தமான அதே முறைமை எமக்குப் பொருந்தவேண்டுமென்றில்லை,

மேலைத் தேசத்தினால் விஞ்ஞான, தொழில்நுட்ப, இயந்திரமய வளர்ச்சி. குறிப்பாக5 ஆம் தலைமுறைக் கணணிவளர்ச்சி அவர்களிடமுண்டு. மேலும்மேலைத்தேசங்களின் அரசியற் ஸ்திரப்பாடு, உலகின்மீதானபொருளாதார ஆதிக்க வல்லமை போன்ற பல்வகை வளத்துடனும் வைத்தே அவர்களின் கல்வித்திட்டத்தை நோக்க வேண்டும். எனவே அதேபோன்ற கல்வி முறை எமக்குப் பொருந்துமென்று எடுக்க வேண்டியதில்லை.

ஆகலால் எமக்குப்பொருத்

**மு. திருநாவுக்கரசு**

சிறுகதை

# அவரை ஒருமுறை சந்திக்க வேண்டும்

பேரிரைச்சலோடு தாழப்பதிந்து மேலெழுந்த நொடிப்பொழுதில், என்ன நிகழ்ந்ததென்பதை உணர முதலே அவன் தூக்கி எறியப்பட்டான் துப்பாக்கியை இறுகப்பற்றிய வலதுகரம் துண்டித்து பொத்தென விழுந்தது

இருள்! இருள்! கனத்து மூடியது!

அவன்விழியைத்திறந்தபோது ஆறுநாட்கள்கழிந்திருந்தன. இரண்டு கரங்களையும் ஒரு விழியையும் அவன் இழந்திருந்த கொடுமை தெரிந்தது. அதை அவன் உணர்ந்த போது

''ஐயோ...'' என வீரிட்டலற முயன்றான் குரல் விம்மலாகத் தூரத்தில், தேய்ந்து ஒலிக்கும் போர்க்கள வேட்டாக வெளிவந்தது.

அவன் மார்பில் ஆதரவாகப் பதிந்த கரத்திற்குரிய இளவழகன் ''நானிருக்கிறேன்ரா ரகு''என்றான் கனன்று கிளம்பிய ஆவேசத்துயரத்தை அடக்கியபடி.

''நான் அவரை ஒருதடவை பார்க்க வேண்டும் ஒரே ஒரு தடவை...அதற்குப் பிறகு செத்துப்போகத் தயார், அழகு ''வார்த்தைகள் மெதுவாக, ஏக்கத்தோடு நிலத்து ஊற்றாகக்கசிந்தன:''அழகுஎனக்காக ஒரு கடிதம் எழுதடா.''

★ ★ ★

அவர் தன்முன் வைக்கப்பட்டிருந்த கோவையைப் பிரித்தார். அவர் மேசையில் கடிதக் கோவையை வைக்கும் போது, முதற்கடிதமாக ரகுவின் கடிதத்தை எடுத்து முதன்மைப்படுத்தியிருந்த வழுதி, அவரைப்பார்த்தபடி நின்றிருந்தான். அது ஒரு நீண்ட கடிதம் அவர் பொறுமையாக அதனைப்படித்தார் நெஞ்சை உருக்கிய இடங்கள் வரும்போது அவர் முகத்தில் தேங்கிய உணர்வலைகளை வழுதி அவதானித்தான்.

'நிச்சயமாக அவனை அழைத்துவா என்பார்.

அவன் இறுதியாக எழுதியிருந்தான்.

'' இந்த மண்ணின்மீட்பில் என்னுயிர் போயிருக்கில் எனக்கு ஒரு தீராதகுறை இருந்திருக்கும் தங்களை ஒரு தடவையாவது சந்திக்காது போகிறேனே என்ற ஏக்கம் இருந்திருக்கும் இந்தக்கடிதத்தைஎன் தோழன் இளவழகன் மூலம் எழுதிவித்துள்ளேன். ஒரே ஒரு தடவை உங்களை நான் பார்க்கவேண்டும், இந்த நாட்டின் யுகபுருஷனை நான் நேரில் காணவேண்டும். அதன் பின் நான் என்னை அழித்துக் கொள்வேன். இருகரங்களும் ஒருவிழியுமில்லாத நானேன் வாழ்வான் ?...''

அவர் அக்கடிதத்தை

லில்லை.

'இவ்வளவு கல்நெஞ்சா? அவரிடம் நான் என்ன கேட்டேன் ஒரு தடவை சந்திக்க அனுமதி அவ்வளவுதான்.

இளவழகன் ரகுவின் அருகில் வந்தான். சன்னந்துளைத்த வாழையாகக் கருகிக் கொண்டிருக்கும் அவன் தோளில் கரம் பதித்தான். அந்த ஆதரவான கரத்தினை பற்றி ஆற முடியாத ரகு நீர் சோரும் விழியுடன் அக்கரத்தின் மீது கன்னத்தைச் சாய்த்துக் கொண்டான்.

''அழகு நீ இல்லாவிடில் நானில்லை. அம்பாறையில் பிறந்து, இங்கையாழ்ப்பாண வந்தன். இந்த மண்ணைக் காக்கும் தியாக வேள்வியில் உன்னோடை இணைந்து கொண்டேன். நட்புக்காக என்னால் உனக்கு எவ்வளவு கஷ்டம். நண்பனே நீ கவளம் கவளமாக உணவூட்டி, குளிப்பாட்டி .. இந்த கைமாறை எப்பிறப்பில் நானுனக்குத் திருப்பிச் செய்யப் போறன்.''

நிம்மதியாகச் சாவதற்கு ஒரு சந்தர்ப்பம் தாருங்கள். நான் இன்று உயிர் வாழ்வதே உங்களைச் சந்திப்பதற்காகத் தான்...''

'இம்முறை நிச்சயமாக அனுமதி கிடைக்கும்' என வழுதி எண்ணிய அதேகணத்தில் அவர் அக்கடிதத்தையும் அப்பால் வைத்து விட்டு மௌனமாக இருந்தார்.

★ ★ ★

இளவழகன் வியப்படைந்தான். வலது கால் விரல்களிடையே பேனை ஒன்றினைப் பொருத்தி இடது பாதத்தால் அழுத்திப் பிடித்த தாளில் ரகு எழுத முயன்று கொண்டிருந்தான்.

''என்னடா ரகு...?

ரகு சிரித்தான். ''அவருக்கு கடிதம் எழுதுறன்.''

''இன்றைக்குக் காலில் கரண்டி பிடித்துச் சாப்பிட்டியாமே...?''

ஓமோம்.. ஒரு மாதிரி நானே சமாளிப்பேன் போலிருக்கடா... என்னால முடியும்...''

''விசரன் போலக் கதையாதை .. ரகு''

''உனக்கு நான் கஷ்டம் தரமாட்டன். அவர் மனமிரங்கி ஒரே ஒரு தடவை தன்னைச் சந்திக்க அனுமதித்தால் மறுகணமே என்னை நான் அழித்துக் கொள்வேன்.''

''இப்படிக் கதையாதையடா ரகு நான் இருக்கும் வரை நீ எதற்கும் கவலைப் படாதை..''

''ஒரு கடிதம் எழுதித் தா அழகு ..?''

''இது முப்பதாவது தடவை சரி சொல்லு''

★ ★ ★

''கடிதம் எழுதி முடிச்சிட்டியா?''

ரகு, அவனைப் பார்த்து வெட்கத்துடன் சிரிக்க முயன்றான்.

★ ★ ★

அவர் அவன் கடிதத்தை வாசித்தார். முகத்தில் பரவிய மந்தகாசமான புன்னகையின் அர்த்தம் வழுதிக்குப் புரியவில்லை.

'பாவம், அவன். இக்கடிதமும் அப்பால் தள்ளப்பட்ட போகிறது' என்று எண்ணிக் கொள்ள முயன்ற வழுதிக்கு, அவரின் வார்த்தைகள்

பெருகியதுடன் மறுபுறம் க.பொ.த. (சதாரணதரம்) மற்றும், க.பொ.த. (உயர்தரம்) ஆகியவற்றிற்கு மேற்கல்வி கற்று வேலைவாய்ப்பற்றஇளைஞர்களின தொகையும் பல்மடங்காய்ப் பெருகியது. இவ்வாறாக பத்து இலட்சம்இளைஞர்கள் வேலையற்றிருக்கின்றனர். இவர்களுள் 7425 பட்டதாரிகள் வேலையற்றவர்களாகவும் இருக்கின்றனர் குறிப்பாகச் சிங்களவர் மத்தியிற் பெருகிவரும் உயர்கல்வி வாய்ப்பின்மை, வேலைவாய்ப்பின்மை பற்றிச் சிங்களப் புத்திஜீவிகளும் பத்திரிகைகளும் அபாயமணி அடிக்கத் தவறவில்லை. தமிழரிற்கு எதிரான தரப்படுத்தல் மூலமாகவோ, அன்றி விகிதாசார ரீதியானது என்று கூறிக்கொண்டு வேலைவாய்ப்பிற் தமிழருக்கு பாரபட்சம் காட்டப்பட்டதன் மூலமாகவோ சிங்களவரின் கல்வி வேலைவாய்ப்புப் பிரச்சினைகளைத் தீர்க்க எந்த ஒரு சிங்கள அரசாங்கத்தாலும்முடியவில்லை இன்றைய நிலையில் முழுத் தமிழரினதும், கல்வி, வேலைவாய்ப்பு உரிமைகளையும் பறித்து அவற்றைச் சிங்களவருக்குக் கொடுத்தாலும் சிங்களவரின் கல்வி, வேலைவாய்ப்புத் தேவைகளை நிரப்ப முடி

...வாரத்தையே சீரழித்துள்ளன

இந்நிலையில் சிங்களவர்களை விடவும் இரட்டிப்பு மடங்கிலோ அன்றிப் பல்மடங்கிலோ பாதிப்புற்றிருக்கும் தமிழரின் கல்விநிலைபற்றி மிக ஆழமான சிந்தனை தமிழர் மத்தியில் அவசியம்.

தமிழர் மத்தியில் அரசியல் ரீதியான தரப்படுத்தல், வேலைவாய்ப்பின்மை பற்றிக் கதைக்கப்பட்டாலும் கல்விமுறைபற்றிய சிந்தனையும் கலந்துரையாடல்களும், கருத்துப் பரிமாற்றங்களும் அநேகமாக இல்லை என்றே சொல்லவேண்டும், இது சம்பந்தமான நிபுணத்துவம் தமிழர் மத்தியில் வளர்க்கப்படவேண்டும். தமிழரின் இன்றைய கல்விநிலை பற்றியும், எமக்குத் தேவையான பொருத்தமான கல்விமுறைபற்றியும் போதியளவு நூல்களும் கட்டுரைகளும் தோன்ற வேண்டும். சிங்கள அரசாங்கங்கள் அறிமுகப்படுத்தும் கல்வி முறைகள் பற்றியும் பாடத்திட்டங்கள் பற்றியும்கூட எம் மத்தியில் இருந்து போதிய விமர்சனங்களோ அன்றிக் கருத்துக்களோ எழுவதில்லை

இப்போது ஒன்றுமட்டும் தெளிவாகத் தெரிகின்றது அதாவது சிங்களப் புத்திஜீவிகளும் பத்திரிகையாளர்களும்

...யே உள்ளது இது அநேகமாகச் சேவைத்துறைக்கும், நிர்வாக உத்தியோகங்களுக்குமே பொருத்தமுடையதாகக்காணப்படுகின்றதே தவிர தொழில்சார் விடயங்களுக்கும் மற்றும் நிர்மாணிப்புப் பணிகளுக்கும் பொருத்தமற்றதாக காணப்படுவதுடன் ஆழமான ஆய்வுகளுக்கும் பொருத்தமற்றதாக உள்ளது.

இலங்கையின் கல்வியின் நோக்கம் உத்தியோகம்தான் பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம் வரை படிக்கும் ஒவ்வொருவரது எண்ணமும் சேவைத்துறைநிர்வாகத்துறை என்பவற்றில் உத்தியோகம் பெறுவதற்காகப் படிப்பது என்பதுதான் இத்தகைய உத்தியோகத்திற்கு நாட்டின் சனத்தொகையில் மிகச் சிறிய விகிதத்தினரே போதுமானது நாட்டின் முழுச்சிறார்களும் இளைஞர்களும் இதனை நோக்கியேபடிக்கின்றனர்அத்துடன் பல்கலைக்கழகக்கல்வியும் ஆய்வுநோக்கத்திற்கேமுதன்மையானதுஎன்றில்லாமல்உத்தியோகத்தையேமுதன்மையானதாக்கிவிட்டது.இந்தவகையில் ஆய்வாளர்கள் கூட வெறும் உத்தியோகத்தர்கள் என்ற மனப்படிமத்தையே தம்மகத்தே கொண்டுள்ளனர்.

இந்த வகையில் வளர்ச்சிய

...தீர்ப்பதற்கான வாய்ப்புக்களையும் அமைப்புக்களையும் அவர்கள் கொண்டுள்ளார்கள் என்பதே உண்மை. அதே வேளை அவர்களுக்குப் பொருத்தமான அதே முறைமை எமக்குப் பொருந்தவேண்டுமென்றில்லை,

மேலைத் தேசத்தினால் விஞ்ஞான, தொழில்நுட்ப, இயந்திரமய வளர்ச்சி, குறிப்பாக5 ஆம் தலைமுறைக் கணணிவளர்ச்சி அவர்களிடமுண்டு.மேலும்மேலைத்தேசங்களின் அரசியற் ஸ்திரப்பாடு, உகிலன்மீதானபொருளாதார ஆதிக்க வல்லமை போன்ற பல்வகை வளத்துடனும் வைத்தே அவர்களின் கல்வித்திட்டத்தை நோக்க வேண்டும். எனவே அதேபோன்ற கல்விமுறை எமக்குப் பொருந்துமென்று எடுக்க வேண்டியதில்லை.

ஆதலால் எமக்குப்பொருத்தமான கல்வி முறை பற்றி ஆழமான பரிசீலனைகள் அவசியம் குறிப்பாக ஈழத்தமிழர் பிரச்சினை இது விடயத்தில் மேலும் ஆழமானது எனவே கல்வி தான் சமூகத்தின் பல்வேறு நிர்மாணிப்புக்குமான அடித்தளம் என்ற வகையில் ஈழத்தமிழர் கல்வியில் புதிய கண்ணோட்டங்கள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

## சந்திக்க வேண்டும்

நெஞ்சை உருக்கிய இடங்கள் வரும்போது அவர் முகத்தில் தேங்கிய உணர்வலைகளை வழுதி அவதானித்தான்.

'நிச்சயமாக அவனை அழைத்துவா என்பார்.

அவன் இறுதியாக எழுதியிருந்தான்.

'' இந்த மண்ணின்மீட்பில் என்னுயிர் போயிருக்கில் எனக்கு ஒரு தீராதகுறை இருந்திருக்கும் தங்களை ஒரு தடவையாவது சந்திக்காது போகிறேனே என்ற ஏக்கம் இருந்திருக்கும் இந்தக்கடிதத்தைஎன் தோழன் இளவழகன் மூலம் எழுதிவித்துள்ளேன். ஒரே ஒரு தடவை உங்களை நான் பார்க்கவேண்டும், இந்த நாட்டின் யுகபுருஷனை நான் நேரில் காணவேண்டும். அதன் பின் நான் என்னை அழித்துக் கொள்வேன். இருகரங்களும் ஒரு விழியுமில்லாத நானேன் வாழ்வான் ?...''

அவர் அக்கடிதத்தைஒதுக்கி அப்பால்வைத்தபோது,வழுதி கணம் துடித்துப் போனான் அவர் கதிரையிலிருந்து எழுந்தார்

★ ★ ★

கதிரையில் அவன் துயரத்தோடு அமர்ந்திருந்தான்.ஆறு மாதங்கள் ஓடி விட்டன.பதில் இல்லை எத்தனை கடிதங்கள் எழுதினான் ஒன்றுக்கும் பதி

''விசரன் போலக் கதையாதை .. ரகு''

''உனக்கு நான் கஷ்டம் தரமாட்டன். அவர் மனமிரங்கி ஒரே ஒரு தடவை தன்னைச் சந்திக்க அனுமதித்தால் மறுகணமே என்னை நான் அழித்துக் கொள்வேன்.''

''இப்படிக் கதையாதையடா ரகு நான் இருக்கும் வரை நீ எதற்கும் கவலைப் படாதை ..''

''ஒரு கடிதம் எழுதித் தா அழகு ..?''

''இது முப்பதாவது தடவை சரி சொல்லு''

★ ★ ★

அவர் அவனின் கடிதத்தை பொறுமையோடு படித்தார். முகத்தில் உணர்வுக் கீறல்கள் நெளிந்ததை வழுதி அவதானித்தான்.

''...நான் என்ன தவறு செய்தேன்? உங்களை ஒரு தடவை சந்திக்க அனுமதி தாருங்கள்.எனக்கு வாழ்க்கை வெறுத்து விட்டது. என்னை

''கடிதம் எழுதி முடிச்சிட்டியா?''

ரகு, அவனைப் பார்த்து வெட்கத்துடன் சிரிக்க முயன்றான்.

★ ★ ★

அவர் அவன் கடிதத்தை வாசித்தார். முகத்தில் பரவிய மந்தகாசமான புன்னகையின் அர்த்தம் வழுதிக்குப் புரியவில்லை.

'பாவம், அவன். இக்கடிதமும் அப்பால் தள்ளப்பட்ட போகிறது' என்று எண்ணிக் கொள்ள முயன்ற வழுதிக்கு, அவரின் வார்த்தைகள் வியப்பைத் தந்தன.

''ரகுவை அழைத்து வா வழுதி. அவனை நான் சந்திக்க வேண்டும்.''

காரணம் வழுதிக்குப் புரியவில்லை.

**கு. ஐஸ்வர்யா**

# அ. செ. மு. தமிழ் பத்திரிகை உலகின் சரித்திரநாயகன்

★ எழுத்துத் துறைக்கு எப்படித் தயாராகினீர்கள்?

பள்ளிக்கூடத்தில் படிக்கும் போதே எனக்கு எழுத்துலகம் மீது நாட்டம் ஏற்பட்டுவிட்டது. எங்கள் வீட்டில் சஞ்சிகைகள் வாசிக்கும் பழக்கம அதிகம். முப்பதுகளில் உள்ளூர்ப் பத்திரிகைகள் கிடையாது. இந்தியப் பத்திரிகைகள்தான். சஞ்சிகைகள் படிக்கும் பழக்கம்தான். நான் எழுதத் தூண்டு கோலாய் அமைந்தது. மாணவனாய் இருந்த போதே பத்திரிகைகளில் எழுதியிருக்கிறேன். அந்த ஆர்வம் பிற்பாடு எனது தலைவிதியாக மாறப்போகிறது என எனக்கு அப்போது தெரியவில்லை. ஈழகேசரியில் சேர்ந்த பிறகுதான் எழுத்துலகில் ஆழ நுழையவேண்டும் என்ற ஆர்வம் உண்டாகியது.

★ ஈழகேசரியில் உங்களுக்கு எபபடி வேலை கிடைத்தது?

1940இல் ஜே. எஸ். சி. - 8ஆம் வகுப்பில் மகாஜனாக் கல்லூரியில் படிக்கும் போது, படிப்பைக் குழப்பிக்கொண்டு பள்ளிக்கூடப் படிப்புக்குக்குட முழுக்குப் போட்டதும் எனது வாழ்க்கையில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. 1941இல் ஈழகேசரியில் ஆசிரிய பீடத்தில் சேர்ந்து கொண்டேன். ஈழகேசரி திரு. இராஜ அரியரெத்தினத்தின் ஆசிரியத்துவத்தின் கீழ் வெளிவந்த காலம் அது. இராஜ அரியரெத்தினம் ஈழகேசரியை விட்டு விலகியதும் அவர் வகித்த பொறுப்பு எனக்கு அளிக்கப்பட்டது. இதனால் பத்திரிகைத்துறையில் எனக்குப் பரிச்சயம் ஏற்பட்டது. படிப்பைவிட எழுத்தாற்றல் எனக்கு இருந்ததால் ஈழகேசரி ஆசிரியர் பொறுப்பை எனக்குக் கொடுத்தார்கள். இரண்டரை மூன்று ஆண்டுகள் இப்படிப்போயிற்று.

★ உங்களுக்குத் தரப்பட்ட முதல் பணி இது. உங்களுக்குக் கிடைத்திருந்த வாய்ப்பைக் கொண்டு குறிப்பாக ஏதேனும் செய்தீர்களா?

ஈழத்து இலக்கியங்களுக்கு ஒரு தனித்தன்மை இருக்க வேண்டும் என்ற தேடலை நான் நாற்பதுகளிலேயே ஆரம்பித்துவிட்டேன் ஈழத்து இலக்கியங்களுக்கு ஒரு ஈழத்து உருவம் இருக்கவேண்டும் என்பது எமது விருப்பமாகும். இலகு நடையிலும், அழகு தமிழிலும் எழுதுபவர்களுக்குக் களம் அமைத்துக்கொடுத்தேன்.

★ நாற்பதுகளில் நீங்கள் மறுமலர்ச்சி மாத சஞ்சிகையில் ஆசிரியராகவும் இருந்திருக்கிறீர்கள் அல்லவா?

இந்தக் காலத்தில்தான் இலக்கிய மறுமலர்ச்சிச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. ஈழத்து இலக்கிய உலகில் பிரபல்ஸ்தர்களான பஞ்சாட்சரசர்மா, நாவற்குளியூர் நடராஜன், அ. ந. கந்தசாமி, தி. ச. வரதராசன், (வரதர்), உருத்திரமூர்த்தி (மஹாகவி), க. இ. சரவணமுத்து இவர்கள் எல்

> நிவாரணச் சாப்பாட்டுடன் காலம் போகிறது. எல்லாம்இழந்தநிலை, உடன்பிறப்புகளும் இல்லை. இப்போது நான் தனிமரம். எழுத இயலாது. கண் பார்வை மங்கிப் போகிறது.

லோரும் மறுமலமர்ச்சி பரம்பரையைச் சேர்ந்தவர்கள் தான். இவர்களில் ஒருவனாகச் சேர்ந்து கொண்ட நானும், இவர்களும் ஒருபத்திரிகையை நடக்க வேண்டும் என்று தீர்மானித்தோம். ஒரு தனித்தன்மை உடைய பத்திரிகை நடத்த வேண்டும் என்ற எண்ணம் எம் மனதைக் குடைந்தது. 1943 இல் மறுமலர்ச்சி என்ற சஞ்சிகையை ஆரம்பித்தோம். அப்போது பண்டித நடைக்குப் பொது மக்கள் மத்தியில் செல்வாக்குக் குறைந்து வந்தது. இலகு தமிழில் ஆக்கப்பட்ட படைப்பிலக்கியங்களுக்கு மறுமலர்ச்சியில் இடமளித்தோம். சமகாலத்தில்தான் மணிக்கொடியும், கு. பா. ரா துறையூரிலிருந்து நடத்திக்கொண்டிருந்த கிராம ஊழியனும் வெளிவந்தன. இந்த இதழ்கள் அப்

**பேட்டி: மதன்**

போது இலக்கிய பூர்வமாகப் புகழ் பெற்றிருந்த காலம். இந்த இதழ்கள் பற்றி என்னதான் சொன்னாலும், நானும் வரதரும் இணை ஆசிரியர்களாக இருந்து ஈழத்து மண் வாசனையுடன் மறுமலர்ச்சியை வெளியிட்டு வந்தோம்.

★ நீங்கள் வேறு பத்திரிகைகளிலும் வேலை செய்துள்ளீர்களா?

1945 முதல் மூன்று வருட காலம் திருக்கோணமலை வாசம். மறுமலர்ச்சி பத்திரிகைக்கு ஆதரவு தேடும் நோக்கத்துடன் அங்கு விஜயம் செய்த நான் அங்கேயே சிறிது காலம் தங்கிவிட்டேன். அதே காலத்தில் சுதந்திரன், வீரகேசரிப் பத்திரிகைகளுக்குத் திருக்கோணமலை நிருபராகக் கடமையாற்றினேன். என்னுடைய இந்த வேலை மிகவும் பயனுடையதாக இருந்தது. இந்தியா சுதந்திரமடைந்க பிறகு எட்டயபுரத்தில் பாரதிக்குப் பெரும் விழா எடுத்த போது நானும் எஸ். டி சிவநாயகமும் (பின்னர் தினபதி ஆசிரியர்) விழாவுக்குச் சென்றிருந்தோம். நான் வீரகேசரியைப் பிரதிநிதித்துவப்படுத்தினேன். எஸ்.டி- சிவநாயகம் சுதந்திரன் சார்பாக வந்திருந்தார். இந்த விழாவில் ப. ஜீவானந்தம், கல்கி கிருஷ்ணமூர்த்தி, ராஜாஜி, சிவஞான கிராமணியார். காமராஜர் போன்ற பெருந்தலைவர்களைச் சந்தித்துப் பேசும் வாய்ப்புக் கிடைத்தது.



★ தொடர்ந்து நீண்டகாலம் நீங்கள் நிருபர் வேலையில் இருந்தீர்களா அல்லது மறுபடியும் ஏதாவது பத்திரிகையில் ஆசிரிய பீடத்தில் சேர்ந்தீர்களா?

வானொலி நாடகம் ஒன்றுக்குக் கொழும்பு சென்ற சமயம் சுதந்திரன் ஆசிரியர் எஸ். டி. சிவநாயகம் என்னைச் சுதந்திரன் ஆசிரியர் குழுவில் சேர்த்துக்கொண்டார். முன்னாள் அமைச்சர் எஸ். ராஜதுரையும் ஆசிரியர் குழுவில் இருந்தார். ஆசிரியர் குழுவில் வடக்கிலும் கிழக்கிலுமிருந்து முக்கியமான எழுத்தாளர்கள் கடமையாற்றினார்கள். அப்படியிருந்தும் தினசரியாக வெளிவந்த சுதந்திரன் நின்று வாரப்பதிப்பானது 1950இல் சுதந்திரன் வாரப்பதிப்பானதும் அதிலிருந்துகலைந்துவீரகேசரிஆசிரியர் குழுவில் சேர்ந்து ஐந்துஆண்டுகள் பணியாற்றினேன். அப்போது கே. பி. ஹரன் ஐயா அவர்கள் ஆசிரியராக இருந்தார். இதன் பிறகு வீரகேசரியில் இருந்து விலகிக் கொழும்பிலிருந்து பத்தி எழுத்தாளராகக் (Columnist) கடமையாற்றினேன். இது ஒரு புது அனுபவமாக இருந்தது. பத்திரிகைத்துறையில் எல்லா வேலைகளிலும் ஈடுபடுவது எமக்கு மனநிறைவைத் தந்தது என்னுடைய வாழ்க்கையை மறுபடியும் யாழ்ப்பாணத்துடன் தொடர்புபடுத்த எண்ணி 1963 இல் ஈழநாடு ஆசிரியர் பீடத்தில் நான்கு ஆண்டுகள் ஈழநாடு வாரமலரைப் பொறுப்பேற்று நடத்தினேன். 1967 இல் ஓய்வு பெற்றுச் சிறிது காலம் வராந்த சுவை அம்சங்களை எழுதினேன். கே. பி. ஹரன் ஐயா அவர்கள் ஆசிரியராகவும் கோபு (எஸ். எம். ஜி.) செய்தி ஆசிரியராகவும் இருந்தார்கள்.

★ இன்றைய போர்க்காலச் சூழ்நிலையில் நீங்கள் வெளிப்படுத்த விரும்பும் உணர்வுகள் எவை?

இன்று நான்எனது 71ஆவது வயதில் மங்கி மறைது குன்றித் தேய்பிறையாக இருக்கிறேன். எனது கிராமமான அளவெட்டி வடக்கில் ஒரு மண்குடிசையில் என் தாயாருடன் வசித்து வந்தேன். 1987 இல் அயலில் நடந்த கண்ணிவெடிச் சம்பவத்தைத் தொடர்ந்து இந்திய இராணுவம் எனது குடிசைக்குத் தீவைத்து நிர்மூலமாக்கியது. எனது புத்தகங்களும் முக்குக்கண்ணாடியும்அக்கினியில் சங்கமமாகின. இப்போதுசிறிலங்கா இராணுவ

[5ஆம் பக்கம் பார்க்க]

# மீண்டும் ஜே. ஓ. சி: பிரேமா ஹமில்ரனிடம் எதை எதிர்பார்க்கிறார்?

பருவமழை துவங்கிவிட்டது. யாழ்ப்பாணத்திலுள்ள அநேகமான வெளிகள் இனி வெள்ளத்தால் நிரம்பி விடும். குறிப்பாக, குடாநாட்டின் விளிம்பில் ஒரு காலத்தில் மரக்கடத்தல்க்காரர்களின் ரகசியப் பாதையாக இருந்ததும் பின் இரண்டாவது ஈழப் போரோடு யாழ்ப்பாணத்தின் பிரதான நுழைவாயிலாக மாறியதுமான கொம்படி, ஊரியான் வெளியில் கடல்நீரேரி படிப்படியாக நுழையப்போகிறது. அங்கு இப்போது வெளியைத்துண்டாடி வேலி போலக் காணப்படும் காவலரண்கள் அநேகமாக மிதக்கப் போகின்றன. பலவேகய இரண்டின் வெற்றி ஒரு பருவகால வெற்றியா இல்லையா என்பதை மழை விரைவில் தீர்மானித்து விடும். மழை யாழ்ப்பாணத்தின் மீதான முற்றுகையை இளகச் செய்துவிடக் கூடும் என்றே பார்வையாளர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். பலவேகய இரண்டின் இறுதி வெற்றி என்பது யாழ்ப்பாணத்துக்கான சமரை ஆரம்பிப்பதிற்றான் தங்கியிருந்தது. அதாவதுகுடாநாட்டை முற்றுகைக்குள் வைத்துக்கொண்டு தாக்குவது. ஆனால், அராலி வெளியில் யாழ்ப்பாணத்துக்கான சமரின் இறுதித் தயாரிப்புக்களில் ஈடுபட்டிருந்த வேளையில் பிரதான தளபதிகள் கொல்லப்பட்ட சம்பவத்தோடு குடாநாட்டுச் சமர் மேலும் ஒருதடவை ஒத்திப் போடப்பட்டு விட்டது. இதில் தளபதி சிசில் வைத்தியரட்ணாவின் துரதிஷ்டமும் கலந்துள்ளது. அவரிற்குத்தரப்பட்ட மிக முக்கியமான ஒரு கோடைகாலத்தை அவர்வீணாக்கிவிட்டார். என்றேகொழும்பில் கருதப்படுவது போலத் தெரிகிறது. பலவேகய இரண்டு வீணானதா? என்ற கேள்வியும் இனி எழலாம். குருதியை வற்றச்செய்யும் கோடையிலும், இடுப்பிற்கு மேல் நீர் தேங்கி நிற்கும் மாரியிலும் ஆயிரக்கணக்கான துருப்புக்களை 12 கிலோமீற்றர் நீள வெளியில் நிறுத்தி வைத்திருப்பதை விரயம் என்று சிசில் கருதாமலிருந்திருக்கலாம். ஆனால் இப்பொழுது மறுபடியும் சக்தி மிக்கவராக மாறியிருக்கும் தளபதி ஹமில்ரன்வனசிங்க இது விசயத்தில் சிசிலைப் போலவே சிந்திப்பார். என்று கூறுவது கடினமானது.

ஆறு மாதங்களிற்கு முன்பு, ஹமில்ரனிடமிருந்து எடுக்கப்பட்ட அவ்வளவு அதிகாரங்களும் கடந்த வாரம் அவரிடம் திருப்பித் தரப்பட்டன. இப்பொழுது அவரது வல்லமையை விடக் கூடுதலான எதிர்பார்ப்புக்களால் அவர் சுற்றிவளைக்கப்

புக்களிற்குத் தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் இழப்புக்களைக் குறைப்பதான உடனடித்திட்டங்களைப் பற்றிச்சிந்திக்கப் போகிறாரா?

கடந்த மார்ச் மாதம் ஜனாதிபதி பிரேமதாஸ கூட்டுப்படைத் தலைமையகத்தைப் (ஜே. ஓ. சி) பலவீனப்படுத்திய அதே சமயம் முப்படைகளின் தளபதிகளையும் பலமுள்ளவர்களாக்கும் நிர்வாக மாற்றம் ஒன்றை அறிவித்தார். அந்த நேரத்தில் இம்மாற்றம் இராணுவ வல்லுனர்களால் நம்பிக்கையின்மைகளோடு நோக்கப்பட்டது. மூத்த தளபதி ஜெனரல் சிறில்ரணதுங்க போன்றோர் மேற்படி மாற்றங்களை ஆதரிக்கவில்லை என்றும் கூறப்பட்டது. எனினும் ஜனாதிபதி மாற்றங்களை அமுல்படுத்தினார் அப்பொழுது அவரிற்கு அப்படிச்செய்ய வேண்டியதொரு தேவை இருந்தது. ஏனெனில் அன்றைக்கெல்லாம் ஜனாதிபதியைச் சுற்றிலும் அவருடைய எதிரிகள் வியூகமிட்டு நின்றார்கள். அரசியலில் தீர்மானிக்கும் சக்தியாக உருவாகியிருந்த இராணுவத்தின் மீது தனது பிடி பலவீனமானது என்றொரு அச்சம் ஜனாதிபதியிடம் இருந்ததாகக் கூறப்பட்டது. கவர்ச்சி மிக்க தளபதிகள் சிலர் இராணுவத்துள் செல்வாக்குச் செலுத்தக் கூடியவர்களாகவும், ஜனாதிபதிக்கு உறுத்தலானவர்களாகவும் வளர்ச்சி கண்டிருந்தார்கள். எனவே இராணுவத்தின் மீது தனதுபிடியை இறுக்க, இராணுவ

**- நிலாந்தன் -**

உயர்பீடத்தில் தனக்கு வசதியான மாற்றங்களைச் செய்ய வேண்டிய கட்டாயம் ஜனாதிபதிக்கு ஏற்பட்டது. ஆனால் ஆறுமாதங்களின் பின் இன்று நிலைமை அவ்வாறில்லை. அன்றிருந்ததை விடவும் பிரேமதாஸாஇன்று ஓரளவிற்குப் பலமானவராகக் காணப்படுகிறார். எதிர்க்கட்சிகளின் வியூகங்களைஅவர் எதுவிதத்திலோ உடைத்துவிட்டார். அவருடைய எதிரிகள் ஒற்றுமையின்றிக் காணப்படுகிறார்கள். அன்று அவரிற்கு உறுத்தலாக இருந்த தளபதிகள் சிலர் இன்று இல்லை. அவரது மாந்திரீக ஆலோசகர்கள் எச்சரித்தது போல அவரது வெளிநாட்டுப் பயணங்கள் ஆபத்தானவைகளாயும் இருக்கவில்லை. சமீபத்தில்தான் அவர் சார்க் நாடுகளிற்குஉத்தியோகபூர்வமாகச் சென்று வந்தார். அதிலும் குறிப்பாக இந்தியாவில் மூன்று நாட்கள் தங்கினார். புதுடில்லி அவரை 21 மரியாதைப் பீரங்கி வேட்டுக்கள் தீர்த்து வர

புலிகளிடம் பறிகொடுத்த ஆயுதங்களின் எண்ணிக்கை விபரங்களைக் கொழும்பு முதலில் இருட்டடிப்புச் செய்து விட்டது புதுடில்லியில் ஜனாதிபதிக்குண்டாகக்கூடியஅசௌகரியங்களைத்தவிர்ப்பதற்காக இது செய்யப்பட்டிருக்கலாம். ஜனாதிபதி புதுடில்லியிலிருந்து நாடு திரும்பிய போது அவர் தன்னை ஸ்திரப்படுத்தும் முயற்சியில் கடந்த மார்ச்சில் இராணுவ உயர் பீடத்தில் மேற்கொண்ட மாற்றங்கள் துருப்புக்களை மிக மோசமானதொரு தோல்வியின் பாதையில் இட்டுச் சென்றிருப்பது கொழும்பில் மிகவும் வலிமையாகஉணரப்பட்டிருந்தது. எனவே இராணுவத்தைப் பலப்படுத்த வேண்டியதின் அவசியத்தை அதாவது திட்டமிடும் கட்டளையிடும் மையங்கள் பற்றிய சிறில் ரணதுங்க போன்றோரின் பரிந்துரைகளைச் செவிமடுக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் பிரேமதாஸாவிற்கு ஏற்பட்டிருக்கக் கூடும். ஆறு மாதங்களின் முன்பு அவர் செய்த மாற்றங்கள் அவர் தன்னை ஸ்திரப்படுத்தும் விதத்தில் செய்யப்பட்டன. இப்பொழுது செய்யப்படும் மாற்றங்கள் ராணுவத்தை ஸ்திரப்படுத்தும் நோக்கிலானவை என்று கருத இடமுண்டு.

ஹமில்ரன் ஜனாதிபதிக்கு விருப்பத்துக்குரியவர் அல்ல என்றே கூறப்படுகிறது. எனினும் தனது மனைவிவழி உறவினரும் ஆபத்தான காலங்களில் துணை நின்றவருமான சிசிலைக் கைவிடவும், ஹமில்ரனைப் பலப்படுத்தவும் வேண்டிய தேவை பிரேமதாஸவிற்கு ஏற்பட்டுள்ளது என்றே கருத வேண்டியுள்ளது. கொல்லப்பட்ட தளபதி கொப்பேகடுவவிற்குப் போட்டியாக சிசிலைப் பலன்படுத்திய பிரேமதாஸ முன்பிருந்த தேவைகள் இப்பொழுது இல்லை என்பதால் சிசிலைக் கைவிட்டுவிட்டார் என்றும் சில அவதானிகள் கூறுகிறார்கள் ஹமில்ரன் தனது முக்கிய பரிவாரங்களை அராலி வெளியில்பறி கொடுத்து விட்டுத் தனியனாக நிற்கிறார் என்பதால் இப்பொழுது ஹமில்ரனிடம் அதிகாரங்களைத் தருவதற்கு ஜனாதிபதி அதிகம் அச்சப்படத் தேவையில்லை என்றும் மேற்படி அவதானிகள் கூறுகிறார்கள் இதேசமயம் மனித உரிமை மீறல்கள் பற்றிய உதவிவழங்கும் நாடுகளின் நிபந்தனைகளைத் திருப்தி செய்யும் விதத்தில் மேற்கத்தைய செய்தியாளர்களால் மிதவாதி என்று கணிக்கப்பட்ட ஹமில்ரனைப் பொறுப்பில் அமர்த்த வேண்டிய ஒரு தற்காலிகத் தேவை ஜனாதிபதிக்கு ஏற்பட்டிருக்கக் கூடும் என்றும் வேறு சில அவதானிகள் கூறுகிறார்கள். ஏனெனில் சிசில் வைத்தியரட்ண பிரிகேடியர் லக்கி அல்கம (இப்பொழுது கிழக்குப் பிராந்தியத் தளபதியாக இருப்பவர்) போன்றோர் தெற்கில் ஜே.வி. பியை நசுக்குவதில் பிரதான பங்கு வகித்தவர்கள் என்பதால் மனித உரிமை மீறல்களோடு இவர்களுடைய பெயர்கள் சம்பந்தப்படக்கூடிய வாய்ப்புக்களைப் பற்றியும் மேற்படி அவதானிகள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

ஜனாதிபதி பிரேமதாஸ பதவியேற்றதிலிருந்துஅநேகமாகமுற்றுகையிடப்பட்டவராகவே காணப்படுகிறார். அவர் பலத்தோடும் அசைக்கமுடியாதவராகவும் காணப்பட்ட ஒரே சந்தர்ப்பம் புலிகளுடனான சமாதானம் நிலவிய காலகட்டம் தான். அந்நாட்களில் ஒரு புறம் ஐ.பி கே.எவ். நிபந்தனைகளின்றி வெளியேறிக்




நேரடியான அல்லது மறைமுகமான விளைவுகள்தான். இப்பொழுது பிரேமதாஸ ஓரளவிற்குப் பலமாகத்தான் காட்சிதருகிறார். எனினும், இது புலிகளுடனான சமாதான காலத்தில் பலத்துடன் ஒப்பிடக் கூடியது அல்ல. அத்தகைய ஒரு காலம் இப்பொழுது திரும்பப் பெறமுடியாத ஒரு நல்ல கனவைப் போல ஆகிவிட்டது. இப்பொழுது அவர் சமாதானத்தைப் பற்றிச்சிந்திப்பதே, நீண்ட போராட்டங்களின் பின் அவர் அடைந்திருக்கும் ஓரளவு ஸ்திரநிலையையும் குழப்புவதாக அமையக்கூடும். இரண்டாவது ஈழப்போரின் தர்க்கபூர்வ வளர்ச்சி இவ்வாறுதான் காணப்படுகிறது. புலிகளுடனான சமாதானத்தை ஒரு குற்றமாகக் கருதும் கொழும்பிலுள்ள அரசியல் வாதிகள், குறிப்பாகப் போர்முனையில் துருப்புக்கள் திணறிக் கொண்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் சமாதானத்திற்கான எந்த ஒரு முயற்சியையும் நாசம் செய்யவே முயல்வர். தோல்விகளிலிருந்தல்ல, வெற்றிகளிலிருந்தே சமாதானத்தைப்பற்றிச் சிந்திப்பதற்கு அவர்கள் எல்லோரும் விரும்புகிறார்கள். பிரேமதாஸ ராணுவம் தன்னை மீறிப் பல மடைவதை விரும்பவில்லை. ஆனால் யுத்தத்தில் வெற்றி பற்றிய நம்பிக்கைகளின்றித் துருப்புக்கள் சோர்வடைவதையும் அவர் விரும்பவில்லை. ராணுவத்துள் காணப்படும் ஸ்திரமின்மையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதைத்தான் அவர் ஹமில்ரனிடம் எதிர்பார்க்கிறார். பொலிவான வெற்றிகளின் மூலம் துருப்புக்களின் சரிந்துபோயுள்ள மனோதிடத்தை மீளக் கட்டியெழுப்புவது அல்லது குறைந்த பட்சம் தொடர்ச்சியாகத் துருப்புக்களிற்குண்டாகிவரும் அதிகரித்த இழப்பு விகிதத்தை இயன்றவரை குறைப்பது. இது தான் ஹமில்ரனின் முன்னாலுள்ள முக்கிய பிரச்சினை இத்தருணத்தில் சமாதானத்தைப் பற்றிச் சிந்திப்பது என்பது சில உள்நாட்டு வெளிநாட்டுச் செய்தியாளர்களின் கற்பனையே தவிர வேறொன்றுமில்லை.

## மீன் பிடிக்கும் பறவை

''கார்மராண்ட்'' என்னும் பறவை மீன் பிடிப்பதில் திறமையுடையது. யப்பானிய மீனவர்கள் இதனை பழக்கி தங்களுக்கு உதவப் பயன் படுத்துகிறார்கள். நிறைய மீன்கள் இருக்கும் இடத்திற்கு பறவையை படகில் அழைத்துச் செல்கின்றனர்.

பறவை தன் நீண்ட அலகில் பல மீன்களைப் பற்றிக் கொண்டு படகுக்குத் திரும்புகிறது. பறவை மீனை விழுங்கிவிடாமல் இருக்க கழுத்தைச்சுற்றி வளையம் ஒன்றை மாட்டிவிடுகின்றார்கள். படகில் வைத்து பறவையின் அலகில் இருந்து மீனை எடுத்துக் கொண்டு திரும்ப அனுப்புகின்றார்கள்.

பல நூற்றாண்டுகளாக ''கார்மராண்ட்'' பறவை மனிதருக்கு உதவிவருகிறது.

பட்டு விட்டது. இதில் தளபதி சிசில் வைத்தியரட்ணாவின் அ ர தி ஷ் ட மு ம் கலந்துள்ளது, அவரிற்குத்த ர ப் ப ட் ட மிக முக்கியமான ஒரு கோடைகாலத்தை அவர்வீணாக்கிவிட்டார். என்றேகொழும்பில் கருதப்படுவது போலத் தெரிகிறது. பலவேகய இரண்டு வீணானதா? என்ற கேள்வியும் இனி எழலாம். குருதியை வற்றச்செய்யும் கோடையிலும், இடுப்பிற்கு மேல் நீர் தேங்கி நிற்கும் மாரியிலும் ஆயிரக்கணக்கான துருப்புக்களை 12 கிலோமீற்றர் நீள வெளியில் நிறுத்தி வைத்திருப்பதை விரயம் என்று சிசில் கருதாமலிருந்திருக்கலாம். ஆனால் இப்பொழுது மறுபடியும் சக்தி மிக்கவராக மாறியிருக்கும் தளபதி ஹமில்ரன்வனசிங்க இது விசயத்தில் சிசிலைப் போலவே சிந்திப்பார். என்று கூறுவது கடினமானது.

ஆறு மாதங்களிற்கு முன்பு, ஹமில்ரனிடமிருந்து எடுக்கப்பட்ட அவ்வளவு அதிகாரங்களும் கடந்த வாரம் அவரிடம் திருப்பித் தரப்பட்டன. இப்பொழுது அவரது வல்லமையை விடக் கூடுதலான எதிர்பார்ப்புக்களால் அவர் சுற்றிவளைக்கப்பட்டுள்ளார். சிசில் சாதிக்கத் தவறியவை என்று கூறப்படுபவற்றையெல்லாம் அவர் சாதிக்க வேண்டியுள்ளது. பெரிதும் எதிர்பார்க்கப்படும் யாழ்ப்பாணத்துக்கான சமரை அவர் ஒரு மழைக்காலச் சமராக அல்லது பனிக்காலச் சமராக ஆரம்பிப்பாரா? அல்லதுஅடுத்த கோடை வரை காத்துதிருப்பாரா? அல்லது கவர்ச்சியான வெற்றிகளைப் பற்றித்திட்டமிடுவதை விடவும் துருப்

## - நிலாந்தன் -

உயர்பீடத்தில் தனக்கு வசதியான மாற்றங்களைச் செய்ய வேண்டிய கட்டாயம் ஜனாதிபதிக்கு ஏற்பட்டது. ஆ னா ல் ஆறுமாதங்களின் பின் இன்று நிலைமை அவ்வாறில்லை. அன்றிருந்ததை விடவும் பிரேமதாஸாஇன்று ஓரளவிற்குப் பலமானவராகக் காணப்படுகிறார். எதிர்க்கட்சிகளின் வியூகங்களைஅவர் எதுவிதத்திலோ உடைத்துவிட்டார். அவருடைய எதிரிகள் ஒற்றுமையின்றிக் காணப்படுகிறார்கள். அன்று அவரிற்கு உறுத்தலாக இருந்த தளபதிகள் சிலர் இன்று இல்லை. அவரது மாந்திரீக ஆலோசகர்கள் எச்சரித்தது போல அவரது வெளிநாட்டுப் பயணங்கள் ஆபத்தானவைகளாயும் இருக்கவில்லை. சமீபத்தில்தான் அவர் சார்க் நாடுகளிற்குஉத்தியோகபூர்வமாகச் சென்று வந்தார். அதிலும் குறிப்பாக இந்தியாவில் மூன்று நாட்கள் தங்கினார். புதுடில்லி அவரை 21 மரியாதைப் பீரங்கி வேட்டுக்கள் தீர்த்து வரவேற்றது. ஆளால் இந்தியர்களின் அரச விருந்தினராக புதுடில்லியில் அவர் தங்கியிருந்த இரவொன்றில் தான், இங்கு கட்டைக்காட்டில் இராணுவத்தின் ஆயுதக்கிடங்கொன்றை புலிகள் கடலாலும் தரையாலும் சுற்றிவளைத்தார்கள். புலிகளுடனான சமாதானத்தின் மூலம் ஐ. பி. கே. எவ். ஐ நிபந்தனைகளின்றி வெளியேற்றிய ஜனாதிபதி புதுடில்லியில் இருந்த சமயம் அ வ ர து துருப்புக்கள்

நிபந்தனைகளைத் திருப்தி செய்யும் விதத்தில் மேற்கத்தைய செய்தியாளர்களால் மிதவாதி என்று கணிக்கப்பட்ட ஹமில்ரனைப் பொறுப்பில் அமர்த்த வேண்டிய ஒரு தற்காலிகத் தேவை ஜனாதிபதிக்கு ஏற்பட்டிருக்கக் கூடும் என்றும் வேறு சில அவதானிகள் கூறுகிறார்கள். ஏனெனில் சிசில் வைத்தியரட்ண பிரிகேடியர் லக்கி அல்கம (இப்பொழுது கிழக்குப் பிராந்தியத் தளபதியாக இருப்பவர்) போன்றோர் தெற்கில் ஜே.வி. பியை நசுக்குவதில் பிரதான பங்கு வகித்தவர்கள் என்பதால் மனித உரிமை மீறல்களோடு இவர்களுடைய பெயர்கள் சம்பந்தப்படக்கூடிய வாய்ப்புக்களைப் பற்றியும் மேற்படி அவதானிகள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

ஜனாதிபதி பிரேமதாஸ பதவியேற்றதிலிருந்துஅநேகமாகமுற்றுகையிடப்பட்டவராகவே காணப்படுகிறார். அவர் பலத்தோடும் அசைக்கமுடியாதவராகவும் காணப்பட்ட ஒரே சந்தர்ப்பம் புலிகளுடனான சமாதானம் நிலவிய காலகட்டம் தான். அந்நாட்களில் ஒரு புறம் ஐ.பி கே.எவ். நிபந்தனைகளின்றி வெளியேறிக் கொண்டிருந்தது. மறுபுறம் ஜே.வி பி.யை அதன் கருவறை சென்று நசுக்க முடிந்தது. ஆனால் இது மிகக் குறுகிய காலம்தான். இரண்டாவது ஈழப்போர் வெடித்தபோது அதுபிரேமதாஸவை சற்றும் எதிர்பாராத ஒரு தருணத்தில் பலவீனப்படுத்தி விட்டது. அதோடு பிரேமதாஸ அநேகமாக உடைந்து போய் விட்டார். அதன் பின் அவர் எதிர்கொண்ட சவால்களில் முக்கியமானவை எல்லாம் புலிகளுடனான சமாதானம் இழக்கப்பட்டதின்

றது. புலிகளுடனான சமாதானத்தை ஒரு குற்றமாகக் கருதும் கொழும்பிலுள்ள அரசியல் வாதிகள், குறிப்பாகப் போர்முனையில் துருப்புக்கள் திணறிக் கொண்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் சமாதானத்திற்கான எந்த ஒரு முயற்சியையும் நாசம் செய்யவே முயல்வர். தோல்விகளிலிருந்தல்ல, வெற்றிகளிலிருந்தே சமாதானத்தைப்பற்றிச் சிந்திப்

விகிதத்தை இயன்றவரை குறைப்பது. இது தான் ஹமில்ரனின் முன்னாலுள்ள முக்கிய பிரச்சினை இத்தருணத்தில் சமாதானத்தைப் பற்றிச் சிந்திப்பது என்பது சில உள்நாட்டு வெளிநாட்டுச் செய்தியாளர்களின் கற்பனையே தவிர வேறொன்றுமில்லை.

## மீன் பிடிக்கும் பறவை

''கார்மராண்ட்'' என்னும் பறவை மீன் பிடிப்பதில் திறமையுடையது. யப்பானிய மீனவர்கள் இதனை பழக்கி தங்களுக்கு உதவப் பயன் படுத்துகிறார்கள். நிறைய மீன்கள் இருக்கும் இடத்திற்கு பறவையை படகில் அழைத்துச் செல்கின்றனர்.

பறவை தன் நீண்ட அலகில் பல மீன்களைப் பற்றிக் கொண்டு படகுக்குத் திரும்புகிறது. பறவை மீனை விழுங்கிவிடாமல் இருக்க கழுத்தைச்சுற்றி வளையம் ஒன்றை மாட்டிவிடுகின்றார்கள். படகில் வைத்து பறவையின் அலகில் இருந்து மீனை எடுத்துக் கொண்டு திரும்ப அனுப்புகின்றார்கள்.

பல நூற்றாண்டுகளாக ''கார்மராண்ட்'' பறவை மனிதருக்கு உதவிவருகிறது.

## அதிக வீதிகள்

உலகிலேயே மொத்த நிலப்பரப்பு ரீதியாக ஒப்பிடுகையில் மிக அதிக நீள வீதிகள் உள்ள நாடு பெல்ஜியம். அங்கு ஒன்றரை சதுரமைல் பரப்புக்கு ஒரு மைல் என்ற விகிதாசாரத்தில் வீதிகள் உள்ளன.

தகவல்:
கி. செல்மர் எமில்
ஊர்காவற்றுறை

## விழுதுகள்

பார்த்து சிரித்தவாறு நின்றான்- வெடிச்சத்தங்களின் விளைவாக சூனியமாகிவிட்ட பகுதியில் அவன் நிற்பதை என்னால் சகிக்க முடியவில்லை- இன்னும் சிறிது நேரம் அவ்வாறு நிற்பின் நிச்சயம் சுற்றி வளைக்கும் எதிரிகள் அவனை குதறுவது உண்மை, உடனே துப்பாக்கியால் சுடுவேன் என்பது போல பாவனை காட்டி அவனை விரட்டினேன்- பிற்காலத்தில் அதனைக் கூறி நாம் சிரிப்பதுவழக்கம்-

இதனைப் போலவே இன்னும் பல சமயங்களில் நாம் எதிரியை அழிப்பதற்கு பெரிதும் உதவினான்- மிருசுவில் பகுதியில் தேசத் துரோகிகள் மீது மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான தாக்குதலிலும் பீற்றரது அயராத முயற்சியும், சிறப்பான வேவுமே பெரும் வெற்றியை ஈட்டித் தந்தது-

அக்கால கட்டத்தில் புகையிரத பாதையை இந்தியப் படையினர் சங்கிலி தொடராகநின்றுபாதுகாக்கும்போது தேச துரோகிகளான ENDLF குழுவினர் கட்டாய பயிற்சிக்காக பிடிக்கும் இளைஞர்களைகிளிநொச்சிக்குகொண்டு சென்று ஒப்படைத்தபின் பெரும் அட்டகாசங்கள் புரிந்த வண்ணம் இருபுறமும் அன்னிய படை கைகோர்த்துநிற்கஎமது மக்களின் மீது சேஷ்டைகள் புரிந்த வண்ணம் செல்வது வழக்கம்.

நெடுநாளாக இதனை அவதானித்த பீற்றர் ஒரு தினம் எம்மிடம் மூச்சிரைக்க ஓடிவந்தான் அன்று வழமையை விட அரைமணிக்கு முன்னமே இராணுவத்தினர் முகாமிற்கு சென்று விட்டமையால் நிட்சயமாக கிளிநொச்சி சென்றுள்ள தேச விரோதிகள் இதை அறியாது வருவரென்றும் அச்சமயம் அவர்களது கதையை முடிக்கலாம் என்றும் திட்டவட்டமாக கூறியதோடு இன்று நிச்சயம் தாக்கவேண்டும் என்றும் விடாப்பிடியாகநின்றான்.

சந்தர்ப்பத்தை நழுவவிடாது நாம் எம் தாக்குதல் அணியை திரட்டி மிகச்சிறப்பாக தாக்குதலை தொடுத்தோம். இதன்போது இரு மினிபஸ்களில் அட்டகாசமாக வந்த துரோகிகளில் பதின்நான்கு கொடியவர்கள் கொல்லப்பட்டு பெருமளவு நவீன ஆயுதங்களையும் ஏராளமான ரவைகளையும் கைப்பற்றி பெரு வெற்றி பெற்றோம்.

இந்த வெற்றிகரமான தாக்குதலின் பின்னணி எங்கள் அன்புக்குரிய பீற்றர் தான் இந்த சம்பவங்களால் எம்மிடையே ஆழமாக பதிந்து விட்டான் இவன். இந்தியப்படைகள் இங்கிருந்துவெளியேறவும் இவன் எம் படையணியில் இணைந்து பயிற்சி பெற்று நடைபெற்ற பல சண்டைகளில்முன்னணிவீரனாக திகழ்ந்தான் இவ்வேளைகளில் இருமுறை விழுப்புண் பட்டான். இவனது வியத்தகு செயற்திறன்களால் யாழ். மாவட்ட

விசேட வேவுப் பிரிவினது பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான் அக்காலத்தில் தனது தீரமிகு செயற்பாடுகளினால் எதிரியை திகிலடையச் செய்தான்.

1.10 92 அன்று கட்டைக்காட்டுப்பகுதியில் எதிரியினது காவலரண்களை ஊடறுத்துத் தாக்கி பெரும் வெற்றியை ஈட்டி, எதிரியின் ஆயுதக்கிடங்கினை கைப்பற்றி, ஏராளமான ஆயுதங்களை மீட்டெடுத்த சரித்திர நிகழ்வில் எங்களது பீற்றர் தீரமாகபோராடி விழுப்புண் ஏற்று களப்படுக்கையில் சாய்ந்தான். களப்படுக்கையே அவனது மரணப் படுக்கையாக இருக்கும் என்பதை எங்களால் அன்று ஊகிக்க முடியவில்லை ஓர் தாய்மையான - உறுதிமிக்க - கொண்ட இலட்சியம் விட்டிடா எங்கள் மைந்தன்- நிரந்தர ஓய்வெடுத்துக் கொண்டான்.

அவனை நான் இறுதியாக சந்தித்த வேளைகளப்படுக்கை அமர்வில் இருந்தவண்ணம் அவன் கூறிய உறுதிமிக்க தெளிவான வார்த்தைகள் இன்னமும் என் காதுகளில் ரீங்காரமிடுகிறது எனக்கு பிரச்சினையொன்றுமில்லை நீங்கள் யோசிக்காமல் அடுத்த தாக்குதலை பாருங்கோ கெதியிலவருவன் ஓ இளம் வீரனே எனக்கு தெரியும் நீ நிட்சயம் களமாட எம்வீரர் மனத்தேறி மீண்டும் மீண்டும் பகைமாய்க்க வருவாய் உன் நினைவுச் சுமையோடு ஆயிரம் ஆயிரம் இளம் வீரர்கள் அணிவகுத்து களமாடச் செல்வர்.

தமிழ்ச்செல்வன்

## அ. செ. மு.

வத்தின் தர்பாரில் இரண்டாவது முறை அகதியாகியுள்ளேன். இப்போது எல்லாம் இழந்த நிலை நிவாரணச் சாப்பாட்டுடன் காலம் போகிறது. உடன் பிறப்புகளும் இல்லை. திருமணமும் செய்யவில்லை. இப்போது நான் தனிமரம். எழுத இயலாது. கண் பார்வை மங்கிப் போகிறது.

''பனை மரம் தாவித் தருவின் 'பொருள்' களைபவனும், பூமியைத் தோண்டி அமுதனைய ஆழ நீர் காண்பவனும் இதேவாழ்வுப் பாதையில் தான் செயற்படுகிறார்கள்- ஆண்டாண்டு காலமாக தம் முன்னோர் வகுத்த வாழ்வுப்பாதை அது ஜீவநதிதீரம்'' அந்த ஜீவநதி என்றென்றும் அதன் வழியே பாய்ந்தோடிக் கொண்டிருக்கும். அ. செ. மு. என்ன நினைத்தாரோ இவ் வாசகங்களை தன் கைப்படவே எழுதித்தந்தார்.

எயிட்ஸ்

மற்றும் ஒரு நோயாளி ஆபத்தான நிலையில் அதே ஆஸ்பத்திரியில்சிகிச்சை பெற்றுவருகிறார்.

இறந்தவர் பன்னிப்பிட்டியாவைச் சேர்ந்தவர். இவரின் இரத்தம் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டிருக்கின்றது. இவரின் மனைவி பல வருடகாலமாக சிங்கப்பூரிலிருந்து அண்மையிலேயே நாடுதிரும்பியவர் என்றும் தெரியவருகின்றது.

வீரச்சாவு

ஐந்து கோடி ரூபா பெறுமதியான போர் தளபாடங்களும் கைப்பற்றப்பட்டமை தெரிந்ததே.

வீரச்சாவு அடைந்த 2 ஆம் லெப்டினன்ட் மறைச்செல்வனுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

கற்பிட்டி

கப்பட்ட மூன்று பேர் கொண்ட குழு விசாரணையை ஆரம்பிக்கவுள்ளது. விசாரணைக் குழுவில் கடற்படை அதிகாரிகள் அங்கம் வகிக்கின்றனர்.

180

காட்டு மிருகங்கள் நாசமாக்கியும் வருகின்றன என்றும்,

பலத்த கஷ்டத்தின் மத்தியில் மேற்கொண்ட நெற் செய்கையை கைவிட வேண்டியுள்ளது என்றும் விவசாயிகள் கவலையுடன் கூறுகின்றனர்.

## லஞ்சக் குற்றச்சாட்டு

கைலஞ்சம், ஊழல், பணக் கையாடல் குறித்த குற்றச் சாட்டுக்கள் சம்பந்தமாகப் பதினைந்து சுங்க அதிகாரிகள் மீது சுங்கத்திணைக்கள விசேட ஒழுக்கப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது. இத்தகவலை சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் லலித் ஹீனகம நேற்று முன்தினம் தெரிவித்தார்.

பொதிகளைக் காலிசெய்யும் போது அறவிடப்படும் பணத்தை இந்த அதிகாரிகளே கையாடுவதாகவும், இது நீண்ட நாள்களாகவே நடைபெற்று வருவதாகவும் சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

வைப்புக்களை

தேவைப்படும் மேலதிகப்பற்று குறுகிய காலக் கடன், நீண்ட காலக் கடன் ஆகியவற்றையும் மக்கள் வங்கியிலேயே பெற்று வருகின்றன. எனினும் தற்போது சங்கங்களின் நாளாந்த விற்பனைப் பணத்தை வைப்பிலிட அதனை ஏற்காது இருப்பதுடன் கடன்களுக்குச் சங்கங்களிலிருந்து வட்டிஅறவிடுவதுசங்கங்களின் செயற்பாட்டைப் பெரிதும் பாதித்துள்ளது

அத்துடன் பணத்தை வங்கியில் இடுவதை ஏற்காதிருப்பது வாடிக்கையாளர்களுக்கும் வங்கிக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையை மீறும் செயல். எனவே பணத்தை வைப்பில், இடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் கூட்டுறவுச்சங்கங்களின்பணத்தை வைப்பில் ஏற்க மறுத்த காலப்பகுதிக்கான வட்டியை கழிப்பதற்கும் இன்று பிராந்தியமுகாமையாளர் சாதகமான முடிவை எடுத்து மாவட்டக் கூட்டுறவுச் சபைக்கு அறிவிக்காதுவிடின் இக்கோரிக்கைகளை வலியுறுத்தி பிராந்திய முகாமையாளர் அலுவலகத்திற்கு முன்னால் எதிர்வரும் திங்கட்கிழமை மறியல் போராட்டம் நடாத்தத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

பற்றறிகள்

துச் செல்லும் வேலையில் ஈடுபடாதிருப்பதாகவும் இந்த லொறிகளின் சாரதிகள், கிளினர்கள் செப்டம்பர் 4 ஆம்திகதியிலிருந்து வருமானம் எதுவுமின்றி கஷ்டப்படுவதாகவும் லொறி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடலில்

ஆதிலிருந்து இயந்திரத்தை எடுத்து கடலில் வீசிவிட்டு வலைகளையும் சேதமாக்கிவிட்டு சென்றுவிட்டனர். கடலில் குதித்த இருவரும் உறவினர்களின் உதவியுடன் கரைசேர்ந்தனர்.

முதலாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்தவர்களான ரி. சுப்பிரமணியம் (வயது 35), ஏ. உலகராசா (வயது 20) ஆகியோரே இவ்வாறு உயிர் தப்பியவர்களாவர். [82]

ஈழநாதம்

# தமிழக அரசைக் கவிழ்க்க சுவாமி - தி. மு. க. கூட்டுச் சதி

## தமிழ்நாடு காங்கிரஸ் குற்றச்சாட்டு

ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம்சுவாமி முதலமைச்சர்ஜெயலலிதாவின் ஆட்சியைக் கவிழ்க்க சதி செய்து வருவதாக தமிழ் நாடு காங்கிரஸ் பொதுச் செயலாளர் தண்டாயுதபாணி குற்றஞ் சாட்டியுள்ளார்.

இந்தஆட்சிக்கவிழ்ப்பு முயற்சிக்காக சுப்பிரமணியம் சுவாமி திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டுச் சேர்ந்து செயற்பட்டு வருகிறார் எனஅவர் தெரிவித்தார்.

அதேசமயம் சுப்பிரமணியம் சுவாமிஆளுனரிடம்கொடுத்த மனுவில் உள்ள குற்றச் சாட்டுக்கள் யாவும் தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்த குற்றச் சாட்டுக்களே எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவிற்கு எதிராகத் தெரிவிக்கப்பட்டுள்ள லஞ்ச ஊழல் குற்றச் சாட்டுகளை விசாரிக்க சுப்பிரீம் கோர்ட் நீதிபதி ஒருவரின் தலைமையில் விசாரணைக் கமிசன் அமைக்கப்பட வேண்டும் என்று சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

பாடசாலை சிற்றூழியர்

# நிரந்தர நியமனத்திற்கு விபரம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளிலும், மற்றும் கல்விக் கந்தோர்களில் கடமையாற்றும் காவலாளி, தொழிலாளி, சுகாதாரத் தொழிலாளர்களை நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அவர்களது விபரங்களை அனுப்புமாறு மாகாண கல்வியமைச்சு கோரியுள்ளது.

ஊழியர்கள் நியமனம் பெற்ற நாளிலிருந்து 1992 ஜனவரி 15 ஆம் திகதிவரை தொடர்ச்சியாக சேவையாற்றியவர்கள் தமது நிரந்தர நியமனத்திற்கு உரிய பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், நியமனக் கடிதம், கல்வித் தகைமைச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளை சிபார்சு செய்து இம் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். பிராந்தியக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது [05]

# வல்வை மகளிர் கல்லூரியில் ஓவியக் கண்காட்சி

எதிர்வரும் 17ஆம், 18ஆ திகதிகளில் வடமராட்சி வல்வை மகளிர் கல்லூரியில் விடுதலைப்புலிகளின் இயக்க வரலாறும் தென் தமிழீழப்படுகொலைகளும் பற்றிய கண்காட்சி காலை 8.00 மணி தொடக்கம் மாலை5.00 மணி வரை நடைபெறவுள்ளது.

கிழக்கு மாகாண மக்கள் சிங்கள இன வெறியரினால் இழைக்கப்பட்ட இன்னல்களை, உண்மை நிகழ்வுகளை எடுத்து இயம்பும் உயிர்ஓவியங்களே இக் கண்காட்சியில் காணப்படும் ஓவியங்களாகும்.

# பம்பலப்பிட்டியில்கொள்ளை; ஓர் இராணுவச்சிப்பாய் கைது

பம்பலப்பிட்டி பகுதியில் கடந்த வருடம் தனியார் நிறுவனம் ஒன்றில் இடம் பெற்ற ஐந்து லட்சம்ரூபா கொள்ளை சம்பந்தமாகச் சந்தேகத்தின் பேரில் சிறிலங்காவின் முன்னாள் இராணுவச் சிப்பாய் உட்பட பிரபல கொள்ளைக் கோஷ்டி நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கைக்குண்டு - கத்தி முதலானவற்றுடன் மேற்படி நிறுவனத்திற்குள் பிரவேசித்த இக் கோஷ்டி அங்கிருந்தோரை அச்சுறுத்தி கொள்ளையை நடத்தியதாகப் பொலிசார் குறிப்பிட்டிருந்தனர்.

இவர்கள் இருவரும் சிலஆயுதங்களுடன் மாத்தறையில் கைது செய்யப்பட்டனர் என்றும், இக் கொள்ளை தொடர்பாக மேலும் ஒரு இராணுவச் சிப்பாயும் தேடப்பட்டு வருகின்றார் என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 18 — 07 — 1974



வீரச்சாவு 16 — 10 — 1990

### வீரவேங்கை செல்டன்

[யேசுதாசன் அன்ரனியுனைட்]

மண்ணின் தாகம் கொண்ட மாவீரனே - உன்னை
எண்ணி தாகம் மறந்தோம் நாம்.

செல்டன் வீதி,
நாவாந்துறை.

யேசுதாசன் (அரியம்)
- குடும்பத்தினர்

(3456)

## நவம்பர் - 6 விண்ணப்ப முடிவு

(கொழும்பு)

கணக்குப் பதிவாளர் தரம் இரண்டு பதவி உயர்விற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் நவம்பர் ஆறாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விபரங்களைச் செப்டெம்பர் 18-ம் திகதி வர்த்தமானியில் பார்வையிடலாம். (பா)

## குண்டசாலை விவசாயக் கல்லூரி அனுமதி

(யாழ்ப்பாணம்)

குண்டசாலை விவசாயக் கல்லூரியில் தமிழ் மொழி மூலம் கல்வி கற்பதற்கான அனுமதியைப் பெற விரும்புவோர் டிசெம்பர் 11-க்கு முன் விண்ணப்பிக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் செப்டெம்பர் 18ஆம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. (பா)


## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையே யாழ். உதைபந்தாட்டப் போட்டிகளின் இன்றைய போட்டியின் விபரம்:

யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் மாலை 3-00 மணிக்கு 17 வயது பிரிவில் ஸ்கந்தவரோதயா எதிர் புங்

## 5-ம் ஆண்டு நினைவலைகள்



### லெப். முத்து

(அர்ச்சுனன் ஜெயக்குமார்)

தோற்றம்:- 14.01.1968

வீரச்சாவு:- 16.10.1987

மண்மீட்புக்காக மரணித்த மாவீரனே
இம் மண்ணுக்குள்ளேயே ஐக்கியமாகிவிட்டவனே
எம் மண்மாதாவின் மணி வயிற்றில்
மீண்டும் கருவாய் உருவாகி உயிர்த்தெழுவாயே!

இந்த மண்ணும் வானும் இருக்கும் வரை
இம்மாநிலம் உன்னை என்றும் மறக்காதே!
ஓ! மாவீரனே உன் நாமம் என்றென்றும்
எம் நெஞ்சில் நீக்கமற நிறைந்து வாழும்!

கனகசபை வீதி,
மானிப்பாய்.

- குடும்பத்தினர்,
உறவினர்கள்

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரஜனனம் 18-02 75



வீரச்சாவு 16-10-91

### லெப்டினன்ட் - நீலன் [சதீஸ்]

(மயில்வாகனம் சேதுலிங்கம்)

(கொக்குத்தொடுவாய் இராணுவத்துடன் நேரடிமோதலில்)

வீரம் விளையாடும் வல்வெட்டித்துறைபெற்ற மைந்தா!
தீரம்பல காட்டி எதிரியை நீ திகைக்கவைத்தாய்!
''சேது நான் சாது அல்ல'' என்று எதிரிக்கு,
கொக்குத்தொடுவாயில் சீறி நின்ற புலியே நீ!
பயணம் முடியுமுன்னே பாதியிலே சென்றாயோ!
வெள்ளை நிறத்தவனே! வேதனையில் சிரிப்பவனே!
பிஞ்சு முகம்மாறா பஞ்சு மனத்தவனே!
கெஞ்சிக் கேட்டாலும் கிடைப்பாயோ நீயெமக்கு
நெஞ்சை நிமிர்த்தி நாம் நின்று! கதைப்பதற்கு
பிஞ்சு உன்போன்ற பிள்ளைகளின் தியாகமன்றோ!!

இங்ஙனம்
கொழும்பப்பா, அம்மாச்சி,
அப்பா, அம்மா, அண்ணா,
அத்தான், அக்கா, மருமகன்

புதுவளவு,
வல்வெட்டித்துறை.

(3478)

வட பிராந்திய வர்த்தகர் சங்கங்களின் சமாஜம்

## பொது அறிவித்தல்

எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 17, 18, 24-ம் திகதிகளில் முழுநாளாக வர்த்தக நிலையங்கள் திறந்து வியாபாரம் செய்யலாமென சமாஜம் தீர்மானித்



1974 1990

## வீரவேங்கை செல்டன்

[யேசுதாசன் அன்ரனியுனைட்]

மண்ணின் தாகம் கொண்ட மாவீரனே - உன்னை
எண்ணி தாகம் மறந்தோம் நாம்.

செல்டன் வீதி, யேசுதாசன் (அரியம்)
நாவாந்துறை. - குடும்பத்தினர்

(3456)

வட பிராந்திய வர்த்தகர் சங்கங்களின்
சமாஜம்

## பொது அறிவித்தல்

எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 17, 18, 24-ம் திகதிகளில் முழுநாளாக வர்த்தக நிலையங்கள் திறந்து வியாபாரம் செய்யலாமென சமாஜம் தீர்மானித்துள்ளது. இவ் அறிவித்தலை சகல வர்த்தக ஸ்தாபனங்களும் நடைமுறைப்படுத்த வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

ஜெ. சந்திரகாந்தன் செ. கந்தசாமித்துரை
செயலாளர். தலைவர்.

(3477)

வலி-கிழக்கு (வ. ப) தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்
(ம. ப) அச்சுவேலி
(Regd. No. J/ 1574 of 19-02-72)

## 'புற்பாய்கள் விற்பனைக்கு'

''தரமான முறையில் தயாரிக்கப்பட்ட தேவைக்கேற்ற வெவ்வேறு அளவுகளைக் கொண்ட புற்பாய்கள் சில்லறையாகவும், மொத்தமாகவும், எமது நிறுவனத்தில் விநியோகிப்பதற்குத் தயாராக இருக்கின்றன. அரசசார்பற்ற நிறுவனங்கள், புனர்வாழ்வு ஸ்தாபனங்கள், தமது தேவைகளைத் தெரிவிப்பின் தேவையான விதத்தில் விநியோகங்கள் மேற்கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்குச் சங்கத்தின் அலுவலகத்தில் அல்லது 222, ஸ்ரான்லி வீதி, சமாச சந்தைப்படுத்தும் பகுதியில் தொடர்பு கொள்ளவும்.''

3475 பொது முகாமையாளர்

கல்லூரியில் தமிழ் மொழி மூலம் கல்வி கற்பதற்கான அனுமதியைப் பெற விரும்புவோர் டிசெம்பர் 11-க்கு முன் விண்ணப்பிக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் செப்டெம்பர் 18ஆம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. (பா)

### இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையே யாழ். உதைபந்தாட்டப் போட்டிகளின் இன்றைய போட்டியின் விபரம்:

யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் மாலை 3-00 மணிக்கு 17 வயது பிரிவில் ஸ்கந்தவரோதயா எதிர் புங்குடுதீவு மகாவித்தியாலயம். மாலை 4-00 மணிக்கு 17வயது பிரிவில் புனித ஜோசப் எதிர் மட்டுவில் சந்திரபுரஸ்கந்தரோதயா.

யாழ். பல்கலைகழக மைதானத்தில் மாலை 3-00 மணிக்கு 19 வயது பிரிவில் புனித ஹென்றியரசர் எதிர் உரும்பராய் இந்துக்கல்லூரி மாலை 4-00 மணிக்கு 19 வயது பிரிவில் வட்டுக்கோட்டை இந்து எதிர் சாவகச்சேரி றிபேக் கல்லூரி,

### "குமண" 20 இல் புறப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கான ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக் கொண்டு ''குமண'' என்ற கப்பல் எதிர்வரும் 20 ஆம் திகதி கொழும்பிலிருந்து புறப்படவுள்ளது. இக்கப்பல் 23-ம் திகதி அல்லது 24 ஆம் திகதி பருத்தித்துறைதுறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.


யாழ் நகரில் ஓர் அழகுச் சுரங்கம்

## "ஜெயா பான்சி ஹவுஸ்"

அழகு வனிதையர் அணிதிரளும் அழகு நிலையம்
''ஜெயா பான்சி ஹவுஸ்''
அழகு சாதனங்கள் வாங்க இன்று அனைவரும்
நாடுமிடம் "ஜெயா"

அன்பளிப்புப் பொருட்கள் வாங்க அன்பு நெஞ்சங்கள்
அன்றாடம் செல்லுமிடம் ''ஜெயா பான்சி ஹவுஸ்''
தையல் நிலையங்களுக்கு வேண்டிய சகல தையல்
மற்றும் பொருட்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும்
விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.

## "ஜெயா பான்சி ஹவுஸ்"

இல 160, நவீன சந்தை உட்புறம் யாழ்ப்பாணம்.
உங்கள் சௌகரியத்தை முன்னிட்டு
இதோ! மற்றுமோர் முகவரி
''ஜெயா அழகு சாதன மாளிகை''
177, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ் நிலையம் அருகாமையில்)

விளம்பர அமைப்பு: ஷண். றெக்கோடிங் ஸ்பொட் யாழ்நகர்- (3476)




## லெப். முத்து

(அர்ச்சுனன் ஜெயக்குமார்)

தோற்றம்:- 14.01.1968 வீரச்சாவு:- 16.10.1987

மண்மீட்புக்காக மரணித்த மாவீரனே
இம் மண்ணுக்குள்ளேயே ஐக்கியமாகிவிட்டவனே
எம் மண்மாதாவின் மணி வயிற்றில்
மீண்டும் கருவாய் உருவாகி உயிர்த்தெழுவாயே!

இந்த மண்ணும் வானும் இருக்கும் வரை
இம்மாநிலம் உன்னை என்றும் மறக்காதே!
ஓ! மாவீரனே உன் நாமம் என்றென்றும்
எம் நெஞ்சில் நீக்கமற நிறைந்து வாழும்!

கனகசபை வீதி, - குடும்பத்தினர்,
மானிப்பாய். உறவினர்கள்

(சி- 3474)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரப்பிறப்பு
25
—
09
—
1968



வீரச்சாவு
16
—
10
—
1988

## கப்டன் கடாபி

(இராமலிங்கம் இரவீந்திரன்)

கடாபி!
அன்று
நீ விட்டது சுதந்திர மூச்சு
இன்று
சுடர் விட்டது - எங்கள்
இலட்சிய நெருப்பு
நீ விதைத்ததோ - இங்கு
விளைந்து குலுங்கியது
அறுவடைக்கு - இப்போ
அரிவாள்கள் நடக்கிறது
ஆகுதியில் எழும்பிய
வேள்வித்தீயில்
விடுதலை விளைந்தது
அதில்
உன் பெயர் நிமிரிது

இல: 254, தர்மபுரம் தந்தை, தாய், அக்காமார்,
பரந்தன். மருமக்கள், மைத்துனர்மார்
(3479) நண்பர்கள்.


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


## லெப்டினன்ட் - நீலன் [சதீஸ்]

(மயில்வாகனம் சேதுலிங்கம்)

(கொக்குத்தொடுவாய் இராணுவத்துடன் நேரடிமோதலில்)

வீரம் விளையாடும் வல்வெட்டித்துறைபெற்ற மைந்தா!
தீரம் பல காட்டி எதிரியை நீ திகைக்கவைத்தாய்!
''சேது நான் சாது அல்ல'' என்று எதிரிக்கு,
கொக்குத்தொடுவாயில் சீறி நின்ற புலியே நீ!
பயணம் முடியுமுன்னே பாதியிலே சென்றாயோ!
வெள்ளை நிறத்தவனே! வேதனையில் சிரிப்பவனே!
பிஞ்சு முகம்மாறா பஞ்சு மனத்தவனே!
கெஞ்சிக் கேட்டாலும் கிடைப்பாயோ நீயெமக்கு
நெஞ்சை நிமிர்த்தி நாம் நின்று! கதைப்பதற்கு
பிஞ்சு உன்போன்ற பிள்ளைகளின் தியாகமன்றோ!!

இங்ஙனம்
புதுவளவு, கொழும்பப்பா, அம்மாச்சி,
வல்வெட்டித்துறை. அப்பா, அம்மா, அண்ணா,
அத்தான், அக்கா, மருமகன்

(3478)

## மரண அறிவித்தல்

## பொன்னுத்துரை செல்வரத்தினம்

(மானிப்பாய்)

இளைப்பாறிய கூட்டுறவு உத்தியோகத்தர், வட பிராந்திய கூட்டுறவுச் சபையின் முன்னாள் செயலாளர், யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் முன்னாள் தலைவர், மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவர், மறுமலர்ச்சி மன்றத்தின் தலைவருமான பொன்னுத்துரை செல்வரத்தினம் காலமானார்.

அன்னார் திலகவதியின் (இளைப்பாறிய ஆசிரியை, மானிப்பாய் இந்துக் கல்லூரி - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) அன்புக் கணவரும், இராசரத்தினம், கந்தசாமி, நாகராசா, திருமதிகள் மனோன்மணி மகேந்திரநாதன், குணமணி அன்னப்பா, இரத்தினமலர் இராஜேந்திரம் ஆகியோரின் சகோதரரும், திருமதிகள் ஞானேஸ் ஜெகநாதன், தனலட்சுமி இலங்கநாதன், தங்கராணி அருணாசலம் ஆகியோரின் மைத்துனரும், அருட்திரு. ஜெயக்குமாரன், அன்னப்பா ஜெயசீலன், ஜெயராஜன் (கனடா), சந்திரன் (கனடா), ஜெயந்தி றெனோல்ட் ஆகியோரின் மாமனாரும், கிருசாந்தி, சிவரஞ்சினி, சிவரஞ்சன், வத்சலா, சுசிகரன், நிரஞ்சலா, தயானி, சுஜந்தன், சுப்றா, உதயமலர், பவானி ஆகியோரின் பெரியப்பாவுமாவார்.

ஈமக்கிரியைகள் இன்று 16 - 10 - 92 பிற்பகல் 2-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
''மன்றம்'' மனைவி
லோட்டன் வீதி,
மானிப்பாய். (3473)

## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 15-10-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 6123

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்
24-5886, 24-3877, 26-1745, 26-6026, 28-3233, 24-6699, 27-6583, 24-1250, 24-7375, 27-9771.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்
26-3321, 41-6893, 41-8035, 26-3390, 24-9967, 42-3419, 22-1647, 27-1494, 26-4323, 27-6741, 24-2680, 26-5762.